நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

# கால்நடை பண்ணை அமைக்க வங்கிக் கடன்: விழிப்புணர்வு கருத்தரங்கு

கால்நடை பண்ணை அமைக்க வங்கிக்கடன் வழங்குவது குறித்து விவசாயிகளுக்கு இலவச விழிப்புணர்வு கருத்தரங்கு வரும் 18-ம் தேதி நடைபெற உள்ளதாக காஞ்சிபுரம் உழவர் பயிற்சி நிலையம் அறிவித்துள்ளது.

இது குறித்து அந்நிலையத்தின் தலைவர் கன. வெங்கட சுதாகர் ராவ் கூறியது:

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தின் காஞ்சிபுரம் ஏனாத்தூரில் உள்ள உழவர் பயிற்சி மையத்தில் ஜனவரி 7-ம் தேதி முதல் பொங்கல் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இவ்விழா வரும் ஜனவரி 19-ம் தேதி வரை நடைபெற உள்ளது.

இந்த விழாவில் கால்நடை வளர்ப்பு குறித்து சிறப்பு பயிற்சிகள், கால்நடை மருத்துவ முகாம்கள், கண்காட்சி, ஒலி, ஒளி காட்சிகள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இதன் ஒரு பகுதியாக கால்நடை பண்ணை அமைக்க வங்கிக் கடனுதவி வசதிகள் குறித்த ஒருநாள் கருத்தரங்கம் வரும் ஜனவரி 18-ம் தேதி நடைபெற உள்ளது. இக்கருத்தரங்கின் இந்தியன் வங்கியின் காஞ்சிபுரம் மண்டல மேலாளர் டி. வாசுதேவன் கலந்து கொண்டு வங்கிக் கடனுதவி குறித்து அறிவுரை வளங்குகிறார்.

கால்நடை வளர்ப்பவர்கள், புதிதாக கால்நடை பண்ணை தொடங்குவதற்கு ஆர்வமுள்ளவர்கள் இக்கருத்தரங்கில் பங்குபெற்று வங்கிக் கடனுதவி குறித்த விவரங்களை அறியலாம். இதில் பங்குபெற ஆர்வமுள்ளவர்கள் வரும் ஜனவரி 17-ம் தேதி 044 - 2726 4019 என்ற தொலைபேசியில் தொடர்பு கொண்டு பெயர்களை முன்பதிவு செய்து கொள்ளலாம் என்றார் அவர்.

# கரும்பு வெட்டும் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்

விழுப்புரத்தில், கரும்பு வெட்டும் கூலியை ஆலை நிர்வாகமே ஏற்க வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, வியாழக்கிழமை, தமிழ்நாடு கரும்பு வெட்டும் தொழிலாளர் சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு மாவட்டத் தலைவர் ஆர். செல்வராஜ் தலைமை வகித்தார். கே. சரவணன், ஆர். விஸ்வநாதன் முன்னிலை வகித்தனர். விக்கிரவாண்டி சட்டப்பேரவை உறுப்பினர் ஆர். ராமமூர்த்தி பேசினார். மாநிலப் பொதுச்செயலாளர் கே. கலியன், சி.ஐ.டி.யு. மாவட்டச் செயலாளர் பி.குமார்,

மாவட்டச்செயலாளர் ஜி.ராஜேந்திரன், மாவட்டத்துணைச் செயலாளர் கே.குப்புசாமி, மாவட்டத் துணைச் தலைவர் டி.முருகன், இ.பத்திரன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

ஆர்ப்பாட்டத்தில் கரும்பு வெட்டும் பத்து லட்சம் தொழிலாளர்களுக்கு தனியாக நல வாரியம் அமைக்க வேண்டும். கரும்பு வெட்டுவதற்கு தொழிலாளர்களுக்கு இலவச சீருடை, ரப்பர்ஷூ வழங்க வேண்டும். விபத்தில் இறந்தால், கரும்பு வெட்டும் தொழிலாளர்களின் குடும்பத்துக்கு ரூ.5 லட்சம் நஷ்டஈடு கிடைக்கும் வகையில் குழு காப்பீடு திட்டத்தை அமுல்படுத்த வேண்டும். இதற்கான பிரிமியத்தொகையை ஆலைநிர்வாகம் செலுத்த வேண்டும். 60 வயதான கரும்பு வெட்டும் தொழிலாளர்களுக்கு எவ்வித நிபந்தனையும் இல்லாமல் மாதம் ரூ.1,000 பென்ஷன் வழங்க வேண்டும். கரும்பு வெட்டும் கூலியை ஆலை நிர்வாகமே வழங்க வேண்டும். ஊக்கத் தொகையாக 1 டன்னுக்கு ரூ.10 வீதம் ஆலை நிர்வாகம் வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

"பி.ஏ.பி.வாய்க்கால் தண்ணீரை குளங்களில் நிரப்ப வேண்டும்'

பி.ஏ.பி வாய்க்கால் நீரை குளங்களில் நிரப்ப வேண்டும் என கணபதிபாளையம் ஊராட்சி தலைவர் சோமசுந்தரம் வலியுறுத்தியுள்ளார்.

பல்லடம் ஒன்றியம் கணபதிபாளையத்தில் மனுநீதி நாள் முகாம் வியாழக்கிழமை நடைபெற்றது. ஊராட்சி மன்றத் தலைவர் சோமசுந்தரம் தலைமை வகித்தார். பல்லடம் வட்டாட்சியர் விஜயகுமார் வரவேற்றார். இதில் திருப்பூர் மாவட்ட வருவாய் அலுவலர் கஜலட்சுமி பங்கேற்று, ரூ.7லட்சத்து 97 ஆயிரத்து 440 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை 104 பயனாளிகளுக்கு வழங்கி பேசினார்.

இவ் விழாவில் கணபதிபாளையம் ஊராட்சி மன்றத் தலைவர் சோமசுந்தரம் பேசியது: கள்ளிமேட்டில் 4 ஏக்கர் 62 சென்ட் அரசு புறம்போக்கு நிலம் உள்ளது. அந்த நிலத்தை கணபதிபாளையம் ஊராட்சியை சேர்ந்த ஏழை மக்களுக்கு வழங்க வேண்டும். ஆனால் பல்வேறு காரணங்களால் இந்தத் திட்டம் தடைபட்டே வருகிறது. எந்தவித அரசியல் தலையீடும் இன்றி உண்மையான ஏழ்மை மக்களுக்கு 2 சென்ட் வீதம் நிலத்தை பிரித்து வழித்தட வசதியுடன் வழங்க வேண்டும். இந்த நல்ல காரியத்தை எந்த அதிகாரி செய்தாலும், அந்தக் குடியிருப்புப் பகுதிக்கு அந்த அதிகாரியின் பெயரை ஊராட்சி மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி வைப்பேன்.

குங்குமம்பாளையம் அரசு துவக்கப் பள்ளி, கணபதிபாளையம் அரசு மேல்நிலைப் பள்ளி ஆகியவற்றுக்கு சத்துணவுக் கூடம் அமைத்து அந்தக் குழந்தைகளுக்கு சத்துணவு வழங்க வேண்டும். நல்லூர்பாளையம், கணபதிபாளையத்துக்கு பள்ளி நேரத்துக்கு போதிய பேருந்து வசதி செய்துத் தரப்பட வேண்டும்.

கணபதிபாளையம், ஆறுமுத்தாம்பாளையம், கரைப்புதூர் ஆகிய ஊராட்சி பகுதிகளில் கடும் குடிநீர் பிரச்னை நிலவுகிறது. இந்தப் பகுதிகளில் அத்திகடவு குடிநீர் போதிய அளவு வழங்க வேண்டும். தண்ணீர் பிரச்னைக்கு தீர்வு காண பி.ஏ.பி.வாய்க்கால் தண்ணீரை குளங்களில் நிரப்ப வேண்டும். அப்போதுதான் கிணறுகளின் நீர்மட்டம் உயரும் என்றார்.

முகாமில் திருப்பூர் ஆர்.டி.ஓ. முருகைய்யா, மாவட்ட வழங்கல் அலுவலர் அசோகன், மாவட்ட பிற்பட்டோர் நலத்துறை அலுவலர் செல்வன் அமல்ராஜ் உள்பட பலர் பங்கேற்றனர்.

## இன்று விவசாயிகள் குறைதீர் கூட்டம்

திருப்பூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் வெள்ளிக்கிழமை(ஜன.18) ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

இதுகுறித்து ஆட்சியர் கு.கோவிந்தராஜ் வெளியிட்ட செய்தி:

திருப்பூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் ஆட்சியர் அலுவலக அரங்கில் வெள்ளிக்கிழமை காலை 11 மணியளவில் நடைபெற உள்ளது. இதில், விவசாயிகள் பங்கேற்று, தங்கள் பிரச்னைகள் குறித்து மனுக்கள் மூலமாக தெரிவிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பவானிசாகர் நீர்மட்டம்

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை நிலவரப்படி 42.46 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 877 கனஅடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 750 கனஅடி நீர் வந்தது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 2.87 டி.எம்.சி.

## விவசாயிகள் தின விழாவில் ஏழை விவசாயிகளுக்கு ரூ. 15 லட்சம் கடனுதவி

கூடலூரில் நடைபெற்ற விவசாயிகள் தின விழாவில் ஏழை விவசாயிகளுக்கு ரூ. 15 லட்சம் விவசாயக் கடன் வியாழக்கிழமை வழங்கப்பட்டது.

யூகோ வங்கி சார்பில் வங்கி வளாகத்தில் நடைபெற்ற விவசாயிகள் தின விழாவுக்கு மேலாளர் ஈ.முருகேசன் தலைமை வகித்தார்.

உதவி மேலாளர் வீ.மதியழகன் முன்னிலை வகித்தார். விழாவில் 10 ஏழை விவசாயிகளுக்கு ரூ. 15 லட்சம் விவசாயக் கடனை வழங்கிய மேலாளர் ஈ.முருகேசன் பேசியது:

யூகோ வங்கியில் 58 பைசா வட்டியில் விவசாயிகளுக்கு நகைக்கடன் உடனடியாக வழங்கப்படுகிறது. இந்த வட்டி மற்ற வங்கிகளை விட மிகக் குறைவாகும்.

மேலும் இந்த ஆண்டு, மருத்துவம், பொறியியல் உள்பட பல்வேறு தொழில் படிப்பு படிக்கும் மாணவர்களுக்கு ரூ. 5 கோடியே 88 லட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது.விவசாயிகளுக்கு ரூ. 6 கோடியே 78 லட்சம், பல்வேறு தொழில் கடனாக ரூ. 3 கோடியே 55 லட்சம் உள்பட பல்வேறு பயன்பாடுகளுக்காக மொத்தம் ரூ. 27 கோடியை யூகோ வங்கி கூடலூரில் மட்டும் கடனாக வழங்கியுள்ளது.

பழைய கடன்களை முறையாகச் செலுத்தும் விவசாயிகளுக்கு புதிய கடன்கள் உடனுக்குடன் வழங்கப்படுகின்றன.

ரிசர்வ் வங்கி வழிகாட்டுதலில், வராக்கடன்களை ஒரே தவணையில் கட்டி முடிப்பவர்களுக்கு சலுகைகள் வழங்கப்படுகின்றன. அரசின் இந்த நலத்திட்டங்களை கூடலூர் பகுதி விவசாயிகள் மற்றும் தொழில்முனைவோர் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றார்.

வங்கி ஊழியர் சங்கச் செயலாளர் என்.பீமன், செயற்குழு உறுப்பினர் வீ.டி.மாரன் மற்றும் பணியாளர்கள் மற்றும் கூடலூர், பந்தலூர் பகுதி வாடிக்கையாளர்கள், விவசாயிகள் இவ்விழாவில் கலந்துகொண்டனர்.

## நீரின்றிக் காயும் காவிரிக் கரையோர வாய்க்கால் பாசனப் பகுதி பயிர்கள்

காவிரி கரையோரத்தில் உள்ள 17 வாய்க்கால் பாசனப் பகுதியில் நீரின்றி காய்ந்து வரும் பயிர்கபிளைக் காப்பாற்ற உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேட்டூர் அணையிலிருந்து கல்லணை வரையில் உள்ள 17 பாசன கிளை வாய்க்கால்கள் மூலம் சுமார் 2 லட்சம் ஏக்கரில் வாழை, கரும்பு, வெற்றிலை போன்ற பணப் பயிர்களும், நெற்பயிர் சாகுபடியும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வியாழக்கிழமை மாலை நிலவரப்படி மேட்டூர் அணையின் நீர்மட்டம் 33.89 அடியாக உள்ளது. அணையிலிருந்து வினாடிக்கு 700 கன அடி நீர் திறக்கப்படுகிறது.

அணையில் நீர்மட்டம் குறைவாக உள்ளதால் குடிநீர் ஆதாரங்களுக்காக மட்டும் குறைந்த அளவில் தண்ணீர் திறக்கப்படுவதாக கூறுகின்றனர் பொதுப் பணித் துறையினர்.

மேட்டூர் அணையிலிருந்து 700 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டாலும், அது மாயனூர் தடுப்பணை அருகே ஏறத்தாழ 100 கன அடி அளவுக்கே கிடைக்கிறது. இதனால் காவிரியில் உள்ள வடபுற கால்வாய், தென்புற கால்வாய், உயர்மட்டக் கால்வாய் மற்றும் உய்யகொண்டான் கால்வாய் ஆகியவற்றுக்கு பாசனத்துக்கு தண்ணீர் கிடைக்கவில்லை என்கின்றனர் விவசாயிகள்.

இதுகுறித்து காவிரி பாசன விவசாயிகள் நலச் சங்க செயல் தலைவர் மகாதானபுரம் வி. ராஜாராம் கூறியது:

மேட்டூர் அணை மூடப்பட்டாலும், ஆண்டு முழுவதும் இந்த பாசன பகுதிகளுக்கு தண்ணீர் விட வேண்டுமென்று அரசு உத்தரவு உள்ளது.

இந்த பகுதிகளில் உள்ள வாழை, கரும்பு ஆகிய பயிர்களைக் காப்பாற்ற மாயனூர் தடுப்பணைக்கு 1,000 கன அடி அளவில் நீர் கிடைக்கும் வகையில் மேட்டூர் அணையிலிருந்தோ அல்லது வேறு ஏற்பாட்டின் மூலமோ தண்ணீர் திறக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார் அவர்.

தமிழ்நாடு காங்கிரஸ் விவசாயப் பிரிவு மாநில துணைத் தலைவர் புலியூர் நாகராஜன் கூறியது: மேட்டூர் அணையிலிருந்து கல்லணை வரையிலான பகுதியில் உள்ள கரூர், நாமக்கல், ஈரோடு, சேலம் மற்றும் திருச்சி உள்ளிட்ட மாவட்டங்களில் காவிரியின் கரையில் உள்ள இந்த வாய்க்கால்கள் மூலம் பாசனம் பெறும் பகுதிகளில் அதிக அளவில் ஆண்டுப் பயிர்களான கரும்பு, வாழை உள்ளிட்டவை சாகுபடி செய்யப்பட்டுள்ளன.

காவிரியில் பல்வேறு கூட்டுக் குடிநீர் திட்டங்களுக்காக தண்ணீர் உறிஞ்சப்படுவதால், திருச்சி பகுதியில் பாசனத்துக்கு போதுமான அளவுக்கு நீர் கிடைக்கவில்லை.

மேட்டூர் அணையில் போதுமான நீர் இருப்பு இல்லாத நிலையில் அமராவதி, பவானி அணைகளிலிருந்து நீர் பெற்று வழங்க அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதுபோன்று ஏற்கனவே எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா ஆகியோர் முதல்வர்களாக இருந்த போது வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மாநில பொதுப் பணித் துறை அமைச்சருக்கும், பொதுப் பணித் துறை அதிகாரிகளுக்கும் கோரிக்கை மனு அனுப்பப்பட்டுள்ளது என்றார் அவர்.

### ஜன. 24-ல் விவசாயிகள் குறை தீர் கூட்டம்

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரகத்தில் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் ஜன. 24-ம் தேதி காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் கா. பாஸ்கரன் மேலும் தெரிவித்திருப்பது:

இந்தக் கூட்டத்தில் புதிய தொழில்நுட்பங்கள் குறித்து விவசாயிகளுக்குத் திட்ட விளக்கம் அளிக்கப்படவுள்ளது. மேலும், விவசாயிகள், முன்னோடி விவசாயிகள், விவசாய சங்க பிரதிநிதிகள் அனைவரும் நீர்ப்பாசனம், கால்நடை, கூட்டுறவு, மின்சாரம், வேளாண்மைப் பொறியியல் துறை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், தோட்டக்கலைத் துறை போன்ற விவசாயம் தொடர்புடைய கருத்துகளை மட்டும் தெரிவிக்கலாம்.

விரும்புவோர் தங்களது பெயர், ஊர், வட்டாரத்தை ஜன. 24-ம் தேதி காலை 8.30 மணி முதல் 10 மணி வரை கணினியில் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

## பேச்சிப்பாறை அணை நீர்மட்டம் 6 அடியாகக் குறைந்தது

கன்னியாகுமரி மாவட்டத்தில் கடும் வெயில் நிலவுவதால் அணைகளில் நீர்மட்டம் வேகமாக சரிந்து வருகிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் கடந்த ஆண்டு தென்மேற்குப் பருவமழையும், வடகிழக்குப் பருவமழையும் போதிய அளவுக்குப் பெய்யவில்லை. இதனால் அணைகளில் பாசனத்துக்கும், குடிநீருக்கும் தேவையான அளவு தண்ணீர் தேங்கவில்லை.

கடந்த ஆண்டு கன்னிப்பூ சாகுபடி பருவத்தில் அனைத்து பாசனப் பகுதிகளுக்கும் தேவையான அளவு தண்ணீர் கிடைக்காததால் கடைமடைப் பகுதிகள் உள்பட பல இடங்களில் நெற்பயிர்

கருகியது. இரண்டாம் போகமான கும்பப்பூ சாகுபடி தற்போது நடைபெற்று வருகிறது. இதற்கும் தேவையான அளவு தண்ணீர் கிடைக்காத நிலையே இருந்து வருகிறது.

இந்த நிலையில் முக்கிய அணையான பேச்சிப்பாறை அணையில் நீர்மட்டம் வேகமாக சரிந்து வருகிறது. ஏற்கெனவே அணையில் கடந்த ஆண்டுகளின் சராசரி அளவு தண்ணீர் இல்லாததாலும், மாவட்டத்தில் கடும் வெயில் நிலவுவதாலும் இந்த அணையில் நீரின் அளவு வேகமாகக் குறைந்து வருகிறது.

வியாழக்கிழமை நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 6 அடியாகக் குறைந்தது. அணைக்கு விநாடிக்கு 52 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அணையிலிருந்து விநாடிக்கு 179 கனஅடி தண்ணீர் வெளியேறுகிறது.

இந்த அணையில் நீர்மட்டம் குறைந்து வருவதால் விவசாயிகள் கவலையில் ஆழ்ந்துள்ளனர். இரண்டாம் போகமான கும்பப்பூ சாகுபடி கரையேறுமா என்ற கேள்வி விவசாயிகள் மத்தியில் எழுந்துள்ளது.

பெருஞ்சாணி அணை: பெருஞ்சாணி அணையில் நீர்மட்டம் 40.55 அடியாக உள்ளது. அணைக்கு விநாடிக்கு 70 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. இந்த அணையிலிருந்து விநாடிக்கு 204 கனஅடி நீர் வெளியேறுகிறது. இதுதவிர சிற்றாறு 1 அணையின் நீர்மட்டம் 5.61 அடியாகவும், சிற்றாறு 2 அணையின் நீர்மட்டம் 5.71 அடியாகவும் உள்ளன.

குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும்: கன்னியாகுமரி மாவட்டத்தில் அணைகளில் நீர்மட்டம் குறைவாக உள்ள நிலை மற்றும் ஜூன் மாதமே அடுத்த பருவமழை பெய்யும் நிலை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டால், தற்போது நடவு செய்யப்பட்டுள்ள இரண்டாம் போகமான கும்பப்பூ சாகுபடி பாதிக்கப்படும் நிலையும், கடும் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்படும் நிலையும் உருவாகியுள்ளது. நாகர்கோவில் நகருக்கு குடிநீர் வழங்கும் முக்கடல் அணையிலும் நீர்மட்டம் வெகுவாகக் கீழிறங்கியுள்ளது.

எனவே இந்த மாவட்டத்தில் அணைகளில் இருந்து பாசனத்துக்காக திறந்து விடப்படும் தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தவும், குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்படாமல் இருக்கவும் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க மாவட்ட நிர்வாகம் முன்வர வேண்டுமென்று விவசாய அமைப்புகள் வலியுறுத்தி வருகின்றன.

## திருச்செந்தூர் வட்டாரப் பகுதிகளில் பருவமழை பொய்த்ததால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

திருச்செந்தூர் வட்டாரப் பகுதிகளில் பருவமழை பொய்த்ததால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் தூத்துக்குடி மாவட்டத் தலைவர் எஸ்.எம்.ராமையா வெளியிட்டுள்ள அறிக்கை: தாமிரவருணி ஆற்றின் கடைமடை பாசனக் குளங்களான நல்லூர் மேலக்குளம், நல்லூர் கீழக்குளம், ஆறுமுகனேரி குளம் என்ற பொய்யாங்குளம், நத்தக்குளம், சீனிமாவடி குளம், ஆவுடையார் குளம் ஆகியவற்றில் நிகழாண்டு

வடகிழக்குப் பருவ மழை பொய்த்ததால் அவை நிரம்பவில்லை. மேலும், அணைக்கட்டுப் பகுதிகளிலிருந்து நீரும் கிடைக்கவில்லை. இதனால் விவசாயம் நடைபெறவில்லை.

ஆண்டுக்கு ஒருமுறை நடைபெறும் பிசான பருவ சாகுபடி நடைபெறாததால் சிறு, குறு விவசாயிகளும், விவசாயத் தொழிலாளிகளும் வருமானமின்றி வறுமைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

எனவே பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு தமிழக அரசு ஏக்கருக்கு ரூ.20ஆயிரம் இழப்பீடு வழங்க வேண்டும் என்றார் அவர்.

தினமலர்

**டெல்டா விவசாயிகளின் பயிறு உற்பத்தி இலக்கு முயற்சி படுதோல்வி**

குறுவை, சம்பா சாகுபடி பாதிக்கப்பட்ட நிலையில், அதை ஈடு கட்டும் வகையில், பயிறு வகைகளை உற்பத்தி செய்ய, விவசாயிகள் போட்ட கணக்கும் கை கூடவில்லை.டெல்டா மாவட்டங்களில், அமைச்Œர்கள் மற்றும் அதிகாரிகள் அடங்கிய உயர்மட்ட குழுவினர், ஆ#வை முடித்துள்ள நிலையில், விவசாயிகளுக்கு எவ்வளவு நிவாரணம் வழங்கப்படும் என்பது, இதுவரை அறிவிக்கப்படவில்லை.ஒரு பக்கம் போராட்டம் நடத்தினாலும், மறு பக்கம், நம்பிக்கையை கைவிடாத விவசாயிகள் பலர், சம்பா சாகுபடி செய்த நிலங்களை பண்படுத்தி, அதில் உளுந்து, துவரை உள்ளிட்ட பயறு வகைகளை, உற்பத்தி செய்யலாம் என, திட்டமிட்டனர்.நெற்பயிர்கள், தண்ணீரை அதிகம் விரும்பும் பயிர்கள் என்பதால், நாற்று நடுவது முதல், அறுவடைக்கு இருவாரங்களுக்கு முன்பு வரை, தண்ணீர் பாய்ச்ச வேண்டிய தேவை இருக்கும். ஆனால், பயறு வகைகளுக்கு, தண்ணீர் தேவை மிகவும் குறைவு.

ஆறுமாத பயிரான இவற்றிற்கு, மூன்று முறை தண்ணீர் பாய்ச்சினாலே போதும் என்பதை மனதில் வைத்தே, விவசாயிகள் இந்த முடிவை எடுத்தனர். இதற்காக, காவிரி கண்காணிப்பு குழு உத்தரவின் பேரில், காவிரியில் இருந்து கர்நாடகா தண்ணீர் திறக்கும் என விவசாயிகள் பெரிதும் நம்பினர். ஆனால், கர்நாடகாவிற்கு குடிநீர் தேவை இருப்பதாகக் கூறி, காவிரி கண்காணிப்பு குழு கைவிரித்ததால், விவசாயிகள் போட்ட பயறு உற்பத்தி திட்டம் கைகூடவில்லை.இதுகுறித்து, இந்திய விவசாயிகள் கூட்டமைப்பின் பொதுச் செயலர், விருத்தகிரி கூறியதாவது:தண்ணீர் தேவை அதிகமின்றி, பயறுவகைகளை உற்பத்தி செய்யலாம். சொட்டுநீர் பாசன முறையும் பயறுவகைகளின் உற்பத்திக்கு கைகொடுக்கும். 2011- 12ம் ஆண்டு, மாநிலம் முழுதும், 3.30 லட்Œம் டன் பயறுவகைகள் உற்பத்தி செய்யப்பட்டது. அதில் ஒரு லட்சம் டன் பயறு வகைகள்,

டெல்டா மாவட்டங்களில் உற்பத்தியானது.குறுவை, சம்பா சாகுபடி கை கொடுக்காததால், அந்த நஷ்டத்தை ஈடுசெய்ய, பயறு உற்பத்தி கைகொடுக்கும் என விவசாயிகள் எதிர்பார்த்தனர். ஆனால், அதுவும் நடக்கவில்லை. தண்ணீர் தட்டுப்பாடு நிலவும் என்பதால், இந்த ஆண்டும், குறுவை சாகுபடி நடக்காது. விவசாயிகள் மேற்கொண்ட கடைசி கட்ட முயற்சியும், தோல்வியடைந்துள்ளது.எனவே, அரசு வழங்கும் இழப்பீட்டை மட்டுமே, விவசாயிகள் நம்பியுள்ளனர். இந்த நிதி தான், விவசாயிகளின் குடும்பங்களை பாதுகாத்துக் கொள்ள உதவும்.இவ்வாறு அவர் கூறினார்.

## மேட்டூர் அணை நீர்மட்டம் 33 அடியாக சரிவு: அழிந்த கிராமங்களை காண மக்கள் ஆர்வம்

மேட்டூர்: மேட்டூர் அணை நீர்மட்டம், 33 அடியாக சரிந்ததால், அணைக்குள் மூழ்கியிருந்த கிராமங்கள், பொதுமக்கள் பயன்படுத்திய பொருட்கள் வெளியே தெரிகின்றன. அதை, கரையோர பொதுமக்கள், ஆர்வத்துடன் பார்த்து செல்கின்றனர்.

மேட்டூர் அணை மொத்தம், 152 சதுர கி.மீ., நீர்பரப்பு பகுதியை கொண்டது; நீர் மட்டம், 120 அடி. அணை கட்டுவதற்கு முன், நீர்பரப்பு பகுதியில் வன்னிமரத்தூர், மலையனூர், பழையூர் உட்பட, 50க்கும் மேற்பட்ட கிராமங்கள் இருந்தன.

அணை கட்டுவதற்காக, அப்போதைய ஆங்கிலேய அரசு, அனைத்து கிராமங்களிலும், பல தலைமுறையாக வசித்த பொதுமக்களை வெளியேற்றியது. பொதுமக்கள், தங்கள் குடியிருப்புகளை அப்படியே விட்டு, உடைமைகளுடன், கிராமங்களில் இருந்து வெளியேறினர். அணை கட்டிய பின், கிராமங்கள் அனைத்தும் நீரில் மூழ்கின.பல ஆண்டுகளாக நீரில் மூழ்கியிருந்ததால், கிராமங்களில் உள்ள வீடுகள், கட்டடங்கள் நீரில் கரைந்து விட்டன. சில இடங்களில், இடிபாடுகளுடன் கூடிய வீடுகள் உள்ளன. பண்ணவாடி அருகே, மக்கள் வெளியேற்றப்பட்ட, காவேரிபுரம் கிராமத்தில் கட்டிய நந்திசிலை, ஜலகண்டேஸ்வரன் கோவில் கோபுரம் இன்னமும் சிதையாமல் உள்ளன.நடப்பாண்டு நீர்வரத்து குறைந்த நிலையில், நேற்று, அணையின் நீர் மட்டம், 33 அடியாக சரிந்தது. இதையடுத்து, நீரில் மூழ்கியிருந்த வன்னிமரத்தூர் கிராமம், தற்போது வெளியில் தெரிகிறது.கிராமத்தில் இருந்த வீடுகள் இடிந்து தரைமட்டம் ஆனாலும், அக்காலத்தில் கிராம மக்கள் பயன்படுத்திய உரல், ஆட்டுக்கல் போன்றவை, இன்னமும் அழியாமல் அப்படியே தென்படுகின்றன.மேட்டூர் அணை வறண்டதால், வெளியில் தெரியும் அடையாளங்களை, மக்கள், ஆர்வத்துடன் பார்த்து செல்கின்றனர்.

## கொடைக்கானலில் உருளைக்கிழங்கு சாகுபடி : தேசிய காப்பீடு திட்டத்தின் மூலம் பலன்

கொடைக்கானல்: உருளை கிழங்கு சாகுபடி செய்யும் கொடைக்கானல் விவசாயிகளுக்கு, இந்த ஆண்டு புதிதாக தேசிய வேளாண் காப்பீடு திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. தேசிய அளவில் வேளாண் உற்பத்தி பயிர்களுக்கான ஆய்வுகள் அவ்வப்போது நடத்தப்பட்டு அதற்கான காப்பீடு திட்டங்கள் அமல்படுத்தப்படும். இந்த ஆண்டு கொடைக்கானல், தாண்டிக்குடி, பண்ணைக்காடு பகுதிகளில் உருளை கிழங்கு சாகுபடி செய்யும் விவசாயிகளுக்காக, புதிய தேசிய வேளாண் காப்பீடு திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. கொடைக்கானலில் 20 ஆயிரம் விவசாயிகள் 3,000 எக்டேரில் உருளை கிழங்கு சாகுபடி செய்கின்றனர். தற்போது ரபி பருவம் துவங்கியுள்ளதால் சாகுபடி செய்வதற்கான விதை கிழங்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கொள்முதல்: காஷ்மீரில் இருந்து கடந்த 20 ஆண்டுகளாக விதை கிழங்கு கொள்முதல் செய்யப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வந்தது. இந்த கிழங்குகளின் தரம் சரியில்லாததால் தற்போது கிருஷ்ணகிரியில் விதை பண்ணை துவங்கப்பட்டு அங்கிருந்து விதை கிழங்கு கொள்முதல் செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

தோட்டக்கலைத்துறையினரின் சான்றிதழ் பெற்று செல்லும் விவசாயிகளுக்கு, 50 சதவீத மானியத்தில் விதை கிழங்கு வழங்கப்படும். இயற்கை இடர்பாடுகளினால் இந்த ஆண்டு சாகுபடியில் நஷ்டம் ஏற்பட்டால், அதை சமாளிப்பதற்காக அனைத்து விவசாயிகளும் காப்பீடு செய்து கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். வங்கிகளில் இருந்து கடன் பெற்றுள்ள விவசாயிகள் காப்பீடு தவணையாக ஏக்கருக்கு ரூ. 3,369 ம், கடன் பெறாத விவசாயிகள் காப்பீடு தவணையாக ரூ. 3032 ம் கட்ட வேண்டும். வறட்சி, மழை, வெள்ளத்தினால் பயிர் அழிந்தால் காப்பீடு செய்த விவசாயிகள் அனைவருக்கும் தலா ரூபாய் ஒரு லட்சத்து 34 ஆயிரம் நஷ்ட ஈடாக வழங்கப்படும்.

கொடைக்கானல் தோட்டக்கலைத்துறை துணை இயக்குனர் ராஜா முகமது கூறுகையில்,""உருளைகிழங்கு விவசாயிகளுக்கு மட்டும் புதிய காப்பீடு திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அந்தந்த பகுதிகளில் உள்ள உதவி வேளாண் அலுவலகங்களில் விண்ணப்பங்களை வாங்கி கொள்ளலாம். இந்த ஆண்டு தரமான குப்ரி ஜோதி விதை கிழங்குகளை கிருஷ்ணகிரியிலிருந்து நேரடியாக கொள்முதல் செய்து அதிக லாபம் பெறவேண்டும்" என்றார்.

## நெல் அறுவடை இயந்திரங்களுக்கு "கிராக்கி' சென்ற ஆண்டை விட கூடுதல் கட்டணம்

பொன்னேரி:நெல் அறுவடை இயந்திரங்களுக்கு கிராக்கி ஏற்பட்டு, சென்ற ஆண்டை விட கூடுதல் கட்டணம் கொடுத்து, விவசாயிகள் அறுவடை செய்கின்றனர்.

மீஞ்சூர் ஒன்றியம், மெதூர், கோளூர், வேம்பேடு, விடதண்டலம், கூடுவாஞ்சேரி, தேவராஞ்சேரி, ஆசானபூதூர் உள்ளிட்ட, 100க்கும் மேற்பட்ட கிராமங்களில், சம்பா பருவத்திற்காக, 26 ஆயிரம்

ஏக்கர் நெல் பயிரிடப்பட்டு இருந்தது.நெற்பயிர்கள் நன்கு வளர்ந்து, சில தினங்களாக விவசாயிகள் அறுவடை பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். ஆட்கள் பற்றாக்குறை, அதிக கூலி செலவு உள்ளிட்ட காரணங்களால், அறுவடை இயந்திரங்கள் மூலம், நெல் அறுவடை செய்யப்படுகிறது.மேற்கண்ட கிராமங்களில், ஒரே சமயத்தில் நெல் அறுவடை பணிகள் மேற்கொள்ளப்படுவதால், அறுவடை இயந்திரங்களுக்கு கடும் கிராக்கி ஏற்பட்டு உள்ளது.கடந்த ஆண்டு ஒரு மணி நேரத்திற்கு, 1,400 ரூபாய் கட்டணம் வசூலித்த, அறுவடை இயந்திரங்கள், இம்முறை, 1,800 ரூபாய் வசூல் செய்யப்படுகிறது. அதற்கு முன்பதிவு செய்து, விவசாயிகள், நெல் அறுவடை இயந்திரங்களுக்காக காத்திருக்கின்றனர்.

இதுகுறித்து, லட்சுமிபுரம் கிராமத்தைச் சேர்ந்த, விவசாயிகள் சிலர் கூறுகையில், "அறுவடை இயந்திரங்கள் இல்லை என்றால், விவசாய பணிகளை மேற்கொள்ள பெரும் சிரமம். நடவு பணிகளின் போது, ஆந்திர கூலித்தொழிலாளர்களை பயன்படுத்திக் கொள்கிறோம். ஆனால், அறுவடை பணிக்கு ஆட்கள் கிடைப்பதில்லை,' என்றனர்.மேலும், "அறுவடை இயந்திரத்தில், ஒரே நாளில் பணிகள் முடிந்து, நெல் மணிகளை விற்பனை செய்ய முடியும். பணியாட்கள் வைத்து மேற்கொள்ளும்போது, இது சாத்தியமில்லை. இதனால், அறுவடை இயந்திரங்களுக்கு கூடுதல் கட்டணம் என்றாலும், அதையே பயன்படுத்த வேண்டிய சூழ்நிலை உள்ளது,' என்றனர்.

**அதிர்ச்சி! கரூர் மாவட்ட விவசாயிகள் கடும்... ஆண்டு சராசரியை விட குறைந்த மழை**

கரூர்: கடந்தாண்டு, சராசரி மழையை விட, குறைந்த அளவு மழையே பெய்துள்ளதால், கரூர் மாவட்ட விவசாயிகள் கடும் அதிர்ச்சியில் உள்ளனர்.
தமிழகத்தில், குறைந்தளவில் மழை பெய்யும் மாவட்டங்களில், கரூரும் ஒன்று. வழக்கமாக, கரூர் மாவட்டத்தில், ஆண்டு தோறும், ஜனவரி முதல், டிசம்பர் வரை, 652.20 மி.மீ., மழை சராசரியாக பெய்ய வேண்டும். ஆனால், கடந்தாண்டு ஜனவரி மாதத்தில், 24.60 மி.மீ., ஃபிப்ரவரி, 7.10, மார்ச், 2, ஏப்ரல், 997.96, மே, 1,064.40, ஜூன், 83.90, ஜூலை, 46.50, ஆகஸ்ட், 493.10, செப்டம்பர், 484.40, அக்டோபர், 230.6, நவம்பர், 808.80, டிசம்பர், 13.9, என, ஆண்டு முழுவதும் மொத்தம், 6,332 மி.மீ., மழை பெய்தது. இதன் சராசரி, 527.70 மி.மீ., மழையாகும்.
இந்நிலையில், கரூர் மாவட்டத்தில், கடந்தாண்டு, 10 ஆயிரத்து, 60 ஹெக்டேரில் நெல்லும், 8,213 ஹெக்டேரில் சிறு தானியமும், 6,328 ஹெக்டேரில் பயறு வகைகளும், 5,828 ஹெக்டேரில் எண்ணை வித்துகளும், 5,662 ஹெக்டேரில் கரும்பும் பயிரிடப்பட்டுள்ளது. ஆண்டு சராசரி மழையை விட, நடப்பாண்டு குறைவாக மழை பெய்துள்ளதால், சாகுபடி செய்யப்பட்டுள்ள

பல்வேறு பயிர்களின் நிலை, கேள்விக்குறியாக உள்ளது.

கரூர் மாவட்டத்தில், காவிரி மற்றும் அமராவதி ஆற்று தண்ணீரை நம்பி, ஆயிரக்கணக்கான விவசாயிகள் உள்ளனர். கடந்தாண்டு, மேட்டூர் அணையில் இருந்து எதிர்பார்த்த அளவில், சம்பா சாகுபடிக்கு தண்ணீர் திறக்கவில்லை. அமராவதி ஆற்று நீரும், கரூர் மாவட்ட விவசாயிகளை ஏமாற்றி விட்டது. இந்நிலையில், கடந்தாண்டு, தென்மேற்கு பருவமழை, வட கிழக்கு பருவ மழை மற்றும் கோடைகால மழையும், எதிர்பார்த்த அளவில் பெய்யவில்லை.

ஆண்டு சராசரி மழையும், கரூர் மாவட்டத்தில் குறைந்து விட்டதால், நிலத்தடி நீர் மட்டமும் வெகுவாக குறைந்துள்ளது. இதனால், கரூர் மாவட்டத்தில் மானாவாரி நிலங்களை நம்பியுள்ள விவசாயிகள், காவிரி, அமராவதி ஆற்றுப் பாசன பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் பெரும் சோகத்தில் உள்ளனர்.

2011ல் ஆண்டில் கொட்டிய மழை!

கரூர் மாவட்டத்தில் கடந்தாண்டு ஆண்டு சராசரி மழை குறைந்த நிலையில், கடந்த, 2011ம் ஆண்டில் தென்மேற்கு பருவமழை, வடகிழக்கு பருமழை காலங்களில், சராசரி மழையளவை விட அதிகமாக பெய்தது. கடந்த, 2011ம் ஆண்டு ஜனவரி மாதம் முதல், டிசம்பர் மாதம் வரை, 8,685 மி.மீ., மழை பெய்தது. இதன் சராசரி, 723.8 மி.மீ., ஆகும். ஆனால் கடந்த, 2012ம் ஆண்டு ஜனவரி மாதம் முதல், டிசம்பர் மாதம் வரை, 6,332 மி.மீ., மழைதான் பெய்துள்ளது. இதன் சராசரி, 527.70 மி.மீ., ஆகும். ஆண்டு சராசரி (652.20) மழையை விட, கரூர் மாவட்டத்தில் 44.50., மி.மீ., மழை குறைவாக கடந்தாண்டில் பெய்துள்ளது.

**வாடிய பயிரை கண்டு விவசாயி வயலிலே சாவு**

திருத்துறைப்பூண்டி: தண்ணீரின்றி காய்ந்து கருகி போன பயிரை கண்ட விவசாயி, மாரடைப்பு ஏற்பட்டு வயலிலேயே இறந்தார்.

திருத்துறைப்பூண்டி அடுத்த கோட்டூர் யூனியன் ஆலத்தூரைச் சேர்ந்தவர் சாம்பசிவம், 45. விவசாயி. இவர், இரண்டு ஏக்கர் நிலத்தில் சாகுபடி செய்திருந்தார். நேற்று காலை சாம்பசிவம் வயலுக்கு சென்றார். அப்போது தண்ணீரில்லாமல் வயல் காய்ந்து, பயிர் கருகியிருந்தது. அதைக்கண்ட சாம்பசிவம் வயலில் மயக்கம் அடைந்து விழுந்தார். அங்கேயே மாரடைப்பு ஏற்பட்டு இறந்தார். சாம்பசிவத்துக்கு, இரு மகள்கள் உள்ளனர்.

இதுகுறித்து கோட்டூர் போலீஸார் வழக்குப்பதிவு செய்து விசாரிக்கின்றனர்.

**அழிவின் விளிம்பில் வெற்றிலை விவசாயம் சிவக்காத ராமநாதபுரம் மாவட்ட விவசாயிகள்**

கீழக்கரை:ராமநாதபுரம் மாவட்டத்தில் பருவ மழை பொய்த்தால் வெற்றிலை விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.பெரியபட்டினம், முத்துபேட்டை, புதுமடம், தங்கச்சிமடம் ஆகிய ஊர்களில் வெற்றிலை பயிரிடுதல் முக்கிய தொழிலாக விளங்கி வந்தது. கறுப்பு வெற்றிலை, வெள்ளை வெற்றிலை, கற்பூர வெற்றிலை என மூன்று வகைகள் இங்கு பயிரிடப்படுகிறது. இந்த பகுதியில் விளையும் வெள்ளை வெற்றிலை "ருசி' மிகுந்துள்ளதால், பிற மாவட்டங்களிலும் நல்ல "கிராக்கி' உள்ளது. கடந்த ஆண்டுகளில் இயற்கை இடர்பாடுகளின் காரணமாக வெற்றிலை விவசாயிகள் பாதிக்கப்பட்டும், அரசு தரப்பில் எவ்வித நிவாரணம் கிடைக்கவில்லை. மற்ற விவசாயிகளுக்கு அளிக்கப்படும் சலுகைகள் இந்த விவசாயிகளுக்கு கிடைக்கவில்லை. இதனால் பொருளாதார நெருக்கடியில் சிக்கி, ஏராளமானோர் விரக்தி அடைந்து, மாற்று தொழிலுக்கு சென்று விட்டனர்.

மழையின்மை மற்றும் மின்தடை காரணமாக முறையாக தண்ணீர் கிடைக்காமல் கொடிக்காலில் இருந்தபடியே வெற்றிலை காய்ந்து, சருகுகளாக மாறி கீழே விழுகின்றன. பெரியபட்டினம் வெற்றிலை விவசாயி அன்சாரி கூறியதாவது: ஒரு ஏக்கரில் வெற்றிலைக் கொடி பயிர் செய்ய ஒரு லட்ச ரூபாய் வரை செலவாகிறது. மழை பொய்த்தால் 80 சதவீத விளைச்சல் இல்லை. அதிகபட்சமாக கிலோ 100 ரூபாய்க்கு தான் விற்பனை செய்யப்படுகிறது. வெற்றிலை பறிப்பதற்கு கூட கூலிக்கு ஆட்கள் கிடைப்பதில்லை. இலவச மின்சாரம், வங்கி கடன் போன்ற சலுகைகளை அளித்து வெற்றிலை விவசாயத்தை காப்பாற்ற அரசு முன்வர வேண்டும், என்றார்.

**தேக்கம்! விற்பனைக்காக குவிக்கப்பட்ட கரும்புகள்... வியாபாரிகள், விவசாயிகள் பெரும் சோகம்**

நாமக்கல்: நாமக்கல் பகுதியில், பொங்கல் பண்டிகையை முன்னிட்டு குவிக்கப்பட்ட கரும்பு, விற்பனையாகாமல், மலைபோல் தேக்கமடைந்தது. அதனால், விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் சோகத்தில் உள்ளனர்.

பொங்கல் பண்டிகையில், தித்திக்கும் செங்கரும்புகள் முக்கிய இடம் பிடிக்கிறது. பண்டிகையை மையப்படுத்தியே, இக்கரும்புகள் பரவலாக விளைவிக்கப்படுகின்றன. இந்தாண்டு பொங்கல் பண்டிகை வருவதற்கு, ஒரு மாதத்திற்கு முன்பே, செங்கரும்புகள் ஆங்காங்கே நடக்கும் கிராம சந்தைகளில் விற்பனைக்கு வந்தது.

எனினும், பண்டிகையொட்டி, அதிகளவில் செங்கரும்புகள் விற்பனைக்கு வந்தது. நாமக்கல்லைப் பொறுத்தவரை, நாமக்கல், பரமத்தி சாலை, மோகனூர் சாலை, வாரச்சந்தை வளாகம், சேலம் சாலை என பல இடங்களில், பல்வேறு இடங்களில் இருந்து கொண்டுவரப்பட்ட கரும்புகள், விற்பனைக்காக மலைபோல் குவிக்கப்பட்டன.

ஒரு ஜோடி கரும்பு, 50 முதல் அதிகபட்சமாக, 75 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டன. கடந்த ஆண்டைப் போலவே, இந்தாண்டும் கரும்பின் விலை உச்சத்தில் இருந்தது. பண்டிகை நேரம் என்பதால், விலை அதிகம் என்ற போதிலும், கரும்புகளை மக்கள் கட்டாயம் வாங்குவர் என, வியாபாரிகள் எதிர்பார்ப்பில் இருந்தனர்.

எனினும், வியாபாரிகளின் எதிர்பார்ப்புகளுக்கு தகுந்தாற்போல், கரும்பு விற்பனையாகவில்லை. மேற்குறிப்பிட்ட பல இடங்களில், விற்பனைக்கு குவிக்கப்பட்ட கரும்புகள், பண்டிகை முடிந்தும் மலைபோல் தேங்கியே கிடந்தது. இது, கரும்பு விவசாயிகள் மற்றும் வியாபாரிகளை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

கரும்பு வியாபாரிகள் சிலர் கூறியதாவது:

நாமக்கல் பகுதியில், லாரி, முட்டைத் தொழில் சிறந்து விளங்குகிறது. அதுபோல், விவசாயமும் முக்கிய இடம் பிடிக்கிறது. உழைக்கும் தொழிலாளர்கள் என்பதால், பண்டிகை சமயத்தில், விலையை பொருட்படுத்தாமல், அனைத்து விதமான பொருட்களையும் வாங்கி மகிழ்ச்சியாக இருப்பர்.

ஆனால், தற்போது நிலைமை தலைகீழாக மாறியுள்ளது. அதற்கு முக்கிய காரணம் மின்வெட்டு பிரச்னை. மின்வெட்டு பிரச்னை காரணமாக லாரி, விவசாயம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. அந்த பாதிப்பு காரணமாக, தொழிலாளர்களிடம் பணப் புழக்கமும் குறைந்துள்ளது.

அதன் எதிரொலியாக, பொங்கல் பண்டிகை சமயத்தில் கரும்புகளை வாங்குவதில், மக்கள் அதிக ஆர்வம் காட்டவில்லை. கடந்த ஆண்டும், இதேபோல் ஒரு ஜோடி கரும்பு, 75 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது. அப்போது, விற்பனைக்கு கொண்டுவரப்பட்ட கரும்பு, ஓரிரு தினங்களில் முற்றிலும் விற்றுத் தீர்ந்தது.

ஆனால், தற்போது விற்னைக்கு கொண்டுவரப்பட்ட கரும்பு விற்பனையாகாமல் தேக்கமடைந்துள்ளது. ஓரிரு வாரத்திற்குள், விற்பனை செய்தால் மட்டுமே, கரும்பின் சுவை இருக்கும். அதன்பின், சாறு குறையும் என்பதால், கரும்புகளை விற்பனை செய்ய இயலாது.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

**பதப்படுத்தப்பட்ட உணவு பொருட்கள் ஏற்றுமதிக்கு அனுமதி**



புதுடில்லி:பதப்படுத்தப்பட்ட ஒரு சில வேளாண் உணவுப் பொருட்களை தடையின்றி ஏற்றுமதி செய்ய, மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது.பிரதமர் மன்மோகன் சிங் தலைமையில், பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவை குழு கூட்டம், நேற்று டில்லியில் நடைபெற்றது.

**அனுமதி:**இக்கூட்டத்தில், குறிப்பிட்ட வேளாண் பொருட்களின் ஏற்றுமதியை அதிகரிக்கும் நோக்கோடு, முக்கிய முடிவுகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது.இதன்படி, பதப்படுத்தப்பட்ட ஓட்ஸ், மக்காச்சோளம், பால், வெண்ணெய், உள்ளிட்ட உணவுப் பொருட்களின் ஏற்றுமதி மீதான, கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டுள்ளன.இதனால், அயல்நாட்டினர், இந்திய ஏற்றுமதியாளர்களுடன், மேற்கண்ட பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்களை, நீண்ட கால அடிப்படையில் இறக்குமதி செய்வர் என, எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த சில ஆண்டுகளாக, வேளாண் பொருட்கள் மற்றும் பதப்படுத்தப்பட்ட பொருட்களின் ஏற்றுமதிக்கு, மத்திய அரசு, அடிக்கடி தடை விதித்து வந்தது.அவ்வப்போது தடை நீக்கப் பட்ட போதிலும், மத்திய அரசின் நிச்சயமற்ற கொள்கையால், இந்திய வேளாண் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு, அயல்நாட்டு வர்த்தகர்கள் ஆர்வம் காட்டாமல் உள்ளனர்.இதனால், பதப்படுத்தப்பட்ட வேளாண் உணவுப் பொருட்களுக்கான, சர்வதேச சந்தையில், இந்தியாவின் பங்களிப்பு அதிகரிக்காத நிலை உள்ளது.

**பால் பவுடர்:**இதை கருத்தில் கொண்டு, கொழுப்பு நீக்கப்பட்ட பால் பவுடர், கேசின் உள்ளிட்டவற்றின் ஏற்றுமதிக்கு, தடை விதிப்பில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம், குறிப்பிட்ட வேளாண் பொருளின் ஏற்றுமதிக்கு தடை விதிக்கப்பட்டாலும், அப்பொருளை பதப்படுத்தி, ஏற்றுமதி செய்ய, தற்போது வழி வகை செய்யப்பட்டுள்ளது.

கடந்த 2010ம் ஆண்டு, டிசம்பரில், வெங்காயம் விலை உச்சத்துக்கு சென்றதை அடுத்து, அதன் ஏற்றுமதிக்கு தடை விதிக்கப்பட்டது. இதனால், 550 கோடி ரூபாய் மதிப்பிலான, உலர

வைக்கப்பட்ட வெங்காய சந்தை கடுமையாக பாதிக்கப்பட்டது.சர்வதேச அளவில், பதப்படுத்தப் பட்ட வெங்காய சந்தையில், இந்தியாவின் பங்களிப்பு, 50 சதவீதம் என்ற அளவில் உள்ளது. ஒட்டுமொத்த வெங்காய ஏற்றுமதிக்கு தடை விதிக்கப்பட்டதால், சர்வதேச அளவில், பதப்படுத்தப்பட்ட வெங்காய சந்தையில், இந்தியா இழந்த வாய்ப்பை, பாகிஸ்தான், வங்கதேசம் போன்ற நாடுகள் பயன்படுத்திக் கொண்டன.அது போன்று, கடந்த 2011ம் ஆண்டு, பிப்ரவரியில், கொழுப்பு நீக்கப்பட்ட பால் பவுடர், "கேசின்' உள்ளிட்டவற்றின் ஏற்றுமதிக்கு தடை விதிக்கப்பட்டது.இத்தடையை நீக்க வேண்டும் என, மத்திய வேளாண் துறை அமைச்சர் சரத் பவார், பிரதமருக்கு கடிதம் எழுதினார்.இந்நிலையில், சென்ற மாதம், கொழுப்பு நீக்கப்பட்ட பால் பவுடர் மற்றும் "கேசின்' பொருள்களின் ஏற்றுமதிக்கு விதிக்கப்பட்ட தடை நீக்கப்பட்டது.

**நம்பகத்தன்மை:**இது போன்று, தடை விதிப்பதும், நீக்குவதும், அயல்நாட்டு இறக்குமதி யாளர்களிடையே, இந்தியா மீதான நம்பகத்தன்மையை பாதிப்பதாக அமைந்துள்ளது. கடந்த 2011-12ம் நிதியாண்டில், இந்தியா, 608 கோடி ரூபாய் மதிப்பிற்கு, பால் பொருள்களை ஏற்றுமதி செய்துள்ளது.உள்நாட்டில் கோதுமை உற்பத்தி அதிகரித்ததை அடுத்து, நான்கு ஆண்டுகளாக அதன் ஏற்றுமதிக்கு விதிக்கப்பட்ட தடையை, கடந்த ஆண்டு மத்திய அரசு, நீக்கியது. இதனால், நடப்பு நிதியாண்டில், தற்போது வரை, 25 லட்சம் டன் கோதுமை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இதே போன்று, சென்ற நிதியாண்டில், சாதாரண அரிசி ஏற்றுமதிக்கும் மத்திய அரசு அனுமதி வழங்கியது. அரிசி ஏற்றுமதிஇதனால், நடப்பு நிதியாண்டில், உலகிலேயே, அதிக அளவில் அரிசி ஏற்றுமதி செய்யும் நாடாக, இந்தியா உருவெடுத்துள்ளது.நடப்பு நிதியாண்டில், நாட்டின் வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருள்கள் (பாசுமதி அரிசி, பழங்கள், பால் பொருட்கள், இறைச்சி உள்ளிட்டவை) ஏற்றுமதி, 1 லட்சம் கோடி ரூபாயை தாண்டும் என, எதிர்பார்க்கப்படுகிறது. இது, சென்ற நிதியாண்டில், 82,480 கோடி ரூபாயாக இருந்தது. இருந்த போதிலும், சர்வதேச சந்தையில், வேளாண் பொருட்கள் ஏற்றுமதியில், இந்தியாவின் பங்களிப்பு குறைவாகவே உள்ளது.இந்தியாவின், பழங்கள், காய்கறிகள் மற்றும் இதர வேளாண் பொருள்கள் ஏற்றுமதியில், சவுதி அரேபியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், இங்கிலாந்து, வங்கதேசம், தென்னாப்ரிக்கா உள்ளிட்ட, 15 நாடுகளின் பங்களிப்பு, 63 சதவீத அளவிற்கு உள்ளது.

## நாட்டின் சர்க்கரை உற்பத்தி 1.08 கோடி டன்னாக உயர்வு



புதுடில்லி: நடப்பு சர்க்கரை சந்தைப்படுத்தும் பருவத்தில் (அக்-செப்), ஜனவரி 15ம் தேதி வரையிலான முதல் மூன்றரை மாத காலத்தில், நாட்டின் சர்க்கரை உற்பத்தி, 3 சதவீதம் அதிகரித்து, 1.08 கோடி டன்னாக வளர்ச்சி கண்டுள்ளது. இது, கடந்த பருவத்தின் இதே காலத்தில்,1.05 கோடி டன்னாக இருந்தது என, இந்திய சர்க்கரை ஆலைகள் கூட்டமைப்பு (இஸ்மா) தெரிவித்துள்ளது.

மகாராஷ்டிராவின் சர்க்கரை உற்பத்தி, 3 சதவீதம் வளர்ச்சி கண்டு, 37.70 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது. இதேபோன்று, கர்நாடகா மாநிலத்தில், இதன் உற்பத்தி, 16 சதவீதம் அதிகரித்து, 20 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது.

அதேசமயம், உத்தரபிரதேசத்தில், சர்க்கரை உற்பத்தி, 29.30 லட்சம் டன்னிலிருந்து, 27.50 லட்சம் டன்னாக சரிவடைந்துள்ளது.மதிப்பீட்டு காலத்தில், ஆந்திராவின் சர்க்கரை உற்பத்தி, 4.60 லட்சம் டன்னாகவும், தமிழகத்தில், 4.90 லட்சம் டன்னாகவும் உள்ளது.நடப்பு 2012-13ம் சந்தைப்படுத்தும் பருவத்தில், நாட்டின் சர்க்கரை உற்பத்தி, 2.40 கோடி டன்னாக இருக்குமென, இஸ்மா தெரிவித்துள்ளது.

## நிலத்தை சமன்படுத்த "லேசர்' மூலம் இயங்கும் தானியங்கி கருவி அறிமுகம்

மறைமலைநகர்:காஞ்சிபுரம் மாவட்டத்தில், விவசாயிகளின் நலனுக்காக, லேசர் மூலம் இயங்கும் தானியங்கி நில சமன்படுத்தும் கருவி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

விவசாயத்திற்கு பயன்படுத்தப்படும் நீரில், 80சதவீதம் நெல் சாகுபடிக்கு மட்டுமே தேவைப்படுகிறது. சரிவர சமன் செய்யப்படாத நிலத்தில் விவசாயம் செய்யும் போது, பள்ளமான பகுதியில் நீர் தேங்குவதாலும், மேட்டு பகுதியில் நீர் பற்றாக்குறையாலும் பயிரின் சீரான வளர்ச்சி பாதிக்கப்படுகிறது.மேட்டுப் பகுதியின் நீர் பற்றாக்குறையை தீர்க்க, தேவைக்கு அதிகமான நீர்

பாய்ச்ச வேண்டியுள்ளது. திருந்திய நெல் சாகுபடி அறிமுகப்படுத்தப்பட்ட பிறகு, இப்பிரச்சனைக்கு ஓரளவிற்கு தீர்வு ஏற்பட்டுள்ளது. ஏனெனில், இம்முறை சாகுபடியில், வயலில் சிறிய நுண்ணிய வெடிப்புகள் தோன்றும் போது, நீர் பாய்ச்சினாலே போதுமானது.காஞ்சிபுரம் மாவட்டத்தில், அதிக அளவில் திருந்திய நெல் சாகுபடி முறையில், நெல் பயிரிடப்படுகிறது. இம்முறையில், சாகுபடியின் பரப்பு ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்த போதிலும், அதற்குரிய அளவில், உற்பத்தி திறன் முழுமையாக கிடைப்பதில்லை.

இதற்கான காரணங்களில் முக்கியமானது, வயல்களின் பரப்பு துல்லியமாக சமன்படுத்தாததே ஆகும்.நெல்லுக்கு, காய்ச்சலும், பாய்ச்சலும் முறையில் நீர் பாய்ச்சும் போது, பள்ளமான பகுதியில் நீர் வடிவதில்லை. மேடான பகுதியில் பெரிய வெடிப்புகள் ஏற்பட்டு, அதிக பாசனம் தேவைப்படுகிறது. அதுமட்டுமின்றி, மற்ற வகை பயிர் சாகுபடியிலும், நிலச் சமன் இல்லாததால், பள்ளமான பகுதி யில் பயிர்கள் அழுகியும், மேடான பகுதியில் பயிர்கள் முளைக்காமலும் மக‹லில் பாதிப்பு ஏற்படுகிறது.நிலத்தினை துள்ளியமாக சமப்படுத்துவதன் மூலம், சொட்டுநீர் பாசனத்தின் செயல் திறன், உரங்களின் பயன்பாடு மற்றும் மின்சாரத்தின் தேவை சீரமைக்கப்படுறது.தற்போது, டிராக்டர்களின் மூலம் மேற்கொள்ளப்படும் சமன்பாடு முறையில், ஓரளவிற்கு மட்டுமே நிலத்தினை சமன் செய்ய முடியும். எனவே, இப்பிரச்னைக்கு தீர்வாக, லேசர் மூலம் இயங்கும் தானியங்கி நில சமன்படுத்தும் கருவி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

வயலினை நன்கு உழுத பிறகு, இக்கருவியை பயன்படுத்த வேண்டும். இதை பயன்படுத்தும் டிராக்டருக்கு 55 -60எச்.பி., இழுவை திறன் அவசியம். எமிட்டர் மற்றும் ரிசீவர் எனப்படும் லேசர் கதிர் மூலம் நிலத்தின் மேடு மற்றும் பள்ளங்கள் அறியப்பட்டு, ஹைட்ராலிக் எனப்படும் பரம்பு மூலம் நிலம் சமப்படுத்தப்படுகிறது.

பக்கெட் ஸ்க்ரேப்பர் எனப்படும் கருவி மூலம் மேடான பகுதியில் இருந்து பள்ளமான பகுதிக்கு கொண்டு வரப்படுகிறது. ஓட்டுனர் கருவியின் மூலம் கொடுக்கும் பீப் ஒலியை வைத்து, மேடு பள்ளங்களை அறிந்து டிராக்டரை ஓட்டும் போது, நிலம் சமன் நிலையை அடையும்.வேளாண்மை பொறியியல் துறை மூலம், விவசாயிகளுக்கு இக்கருவி வாடகைக்கு அளிக்கப்படுகிறது.

இதுகுறித்த மேலும் விவரங்களுக்கு, காட்டுப்பாக்கம், வேளாண் மை அறிவியல் நிலையத்தை, 044- 2745 2371 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

நன்மைகள் வயலின் மேற்பரப்பு துள்ளியமாக சமன் செய்யப்படுகிறது. நீர் மேலாண்மைக்கு மிகவும் உகந்தது. பாசன நீர் அளவு, நேரம் மற்றும் சக்தி சரியான அளவில்

பயன்படுகிறது.குறைந்த அளவு நீர் பாசனத்தால், மின்சார பயன்பாடு குறைகிறது. சீரான முளைப்பு திறனால் மக‹ல் அதிகரிக்கிறது. களையால் ஏற்படும் பாதிப்பு குறைகிறது. பயிர் பாதுகாப்பிற்கான நேரம் மற்றும் ஆட்கள் தேவை குறைகிறது. விவசாயத்தில், 16 - 20 சதவீதம் வரை மக‹ல் அதிகரிக்கிறது.

**விவசாயிகள் புறக்கணிப்புமூடுவிழாவை நோக்கி செங்கல்பட்டு உழவர் சந்தை**

செங்கல்பட்டு;தொடர்ந்து விவசாயிகள் புறக்கணிப்பதால், செங்கல்பட்டு உழவர் சந்தை மூடும் நிலையில் உள்ளது.செங்கல்பட்டில் பழைய பேருந்து நிலையம் அருகில் உழவர் சந்தை உள்ளது. இது, காஞ்சிபுரம் மாவட்டத்தின் முதல் உழவர் சந்தையாக, கடந்த 2000ம் ஆண்டு துவக்கப்பட்டது. விவசாயிகளுக்கு, 45 கடைகள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு, 15 கடைகள் என, 60 கடைகள் அமைக்கப்பட்டுள்ளன.கிராமங்களில் இருந்து...செங்கல்பட்டு சுற்றுப்புற கிராமங்களான பொன்விளைந்தகளத்தூர், புக்கத்துறை, சென்னேரி, அனுமந்தபுரம், ஆத்தூர், திம்மாவரம், வில்லியம்பாக்கம், மேலச்சேரி ஆகிய இடங்களில் விவசாயிகள் உற்பத்தி செய்யும் காய்கறிகளை இங்கு விற்க கடைகள் ஒதுக்கப்பட்டது. கத்தரி, தக்காளி, வெண்டை, புடலங்காய், வெங்காயம், கேரட், பீட்ரூட் ஆகியவற்றை விவசாயிகளும், ஆர்வமாக கொண்டுவந்து வியாபாரம் செய்தனர்.உழவர் சந்தையின் வியாபாரம் இரு ஆண்டுகளுக்கு மட்டுமே நீடித்தது. நாளடைவில் விவசாயிகளிடம் ஆர்வம் குறைந்து, சந்தைக்கு வராமல் தவிர்த்தனர். கடந்த 12 ஆண்டுகளாக, விவசாயிகள் கடை நடத்த விரும்பாமல் தொடர்ந்து புறக்கணிப்பதால், பல ஆண்டுகளாக வெறிச்சோடியே காணப்படுகிறது. தற்போது ஓரிரு கடைகள் மட்டுமே உள்ளன. ஒரு சிலரே வந்து, காய்கறிகளை வாங்குகின்றனர்.இதுகுறித்து விவசாயி ஒருவர் கூறியதாவது:உழவர் சந்தைக்கு காய்கறிகள் கொண்டு வரும் விவசாயிகள், தாங்கள் கொண்டு வந்த பொருட்கள் விற்பனையாகும் வரை, பல மணி நேரம் காத்திருக்க வேண்டியுள்ளது. இதனால் அவர்களின் விவசாயவேலையும், பிற வேலைகளும் பாதிக்கின்றன.

எனவே, காய்கறிகளை கமிஷன் அடிப்படையில் மொத்த வியாபாரிகளிடம் கொடுத்துவிட்டு செல்கின்றனர்.அதிக லாபம்காய்கறிகளை இங்கு விற்றால் அதிக லாபம் கிடைக்கும். ஆனால், இது குறித்த விழிப்புணர்வு விவசாயிகளிடம் இல்லை. மேலும், உழவர் சந்தை அருகில் உள்ள மேட்டுத்தெருவில் சாலையோரம் கடை பரப்பி காய்கறிகள் விற்கின்றனர். இக்கடைகளை அகற்றினால் மட்டுமே, உழவர் சந்தையில் விற்பனை நடக்கும்.இவ்வாறு அவர் கூறினார்.இதுகுறித்து வேளாண்மை விற்பனைத்துறையைச் சேர்ந்த அதிகாரி ஒருவர்

கூறும்போது, "விவசாயிகளுக்கு கடை நடத்தும் ஆர்வமின்றி வேறு இடங்களில் விற்கின்றனர். விடுமுறை நாட்களில் மட்டும் ஓரளவிற்கு கூட்டம் வருகிறது. அனைத்து கடைகளிலும், வியாபாரம் செய்ய விவசாயிகளை வரவழைக்க நடவடிக்கை எடுக்கப்படும்,' என்றார்.

**நெல் அறுவடை இயந்திரங்களுக்கு "கிராக்கி' சென்ற ஆண்டை விட கூடுதல் கட்டணம்**

பொன்னேரி:நெல் அறுவடை இயந்திரங்களுக்கு கிராக்கி ஏற்பட்டு, சென்ற ஆண்டை விட கூடுதல் கட்டணம் கொடுத்து, விவசாயிகள் அறுவடை செய்கின்றனர்.
மீஞ்சூர் ஒன்றியம், மெதூர், கோளூர், வேம்பேடு, விடதண்டலம், கூடுவாஞ்சேரி, தேவராஞ்சேரி, ஆசானபூதூர் உள்ளிட்ட, 100க்கும் மேற்பட்ட கிராமங்களில், சம்பா பருவத்திற்காக, 26 ஆயிரம் ஏக்கர் நெல் பயிரிடப்பட்டு இருந்தது.நெற்பயிர்கள் நன்கு வளர்ந்து, சில தினங்களாக விவசாயிகள் அறுவடை பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். ஆட்கள் பற்றாக்குறை, அதிக கூலி செலவு உள்ளிட்ட காரணங்களால், அறுவடை இயந்திரங்கள் மூலம், நெல் அறுவடை செய்யப்படுகிறது.மேற்கண்ட கிராமங்களில், ஒரே சமயத்தில் நெல் அறுவடை பணிகள் மேற்கொள்ளப்படுவதால், அறுவடை இயந்திரங்களுக்கு கடும் கிராக்கி ஏற்பட்டு உள்ளது.கடந்த ஆண்டு ஒரு மணி நேரத்திற்கு, 1,400 ரூபாய் கட்டணம் வசூலித்த, அறுவடை இயந்திரங்கள், இம்முறை, 1,800 ரூபாய் வசூல் செய்யப்படுகிறது. அதற்கு முன்பதிவு செய்து, விவசாயிகள், நெல் அறுவடை இயந்திரங்களுக்காக காத்திருக்கின்றனர்.

இதுகுறித்து, லட்சுமிபுரம் கிராமத்தைச் சேர்ந்த, விவசாயிகள் சிலர் கூறுகையில், "அறுவடை இயந்திரங்கள் இல்லை என்றால், விவசாய பணிகளை மேற்கொள்ள பெரும் சிரமம். நடவு பணிகளின் போது, ஆந்திர கூலித்தொழிலாளர்களை பயன்படுத்திக் கொள்கிறோம். ஆனால், அறுவடை பணிக்கு ஆட்கள் கிடைப்பதில்லை,' என்றனர்.மேலும், "அறுவடை இயந்திரத்தில், ஒரே நாளில் பணிகள் முடிந்து, நெல் மணிகளை விற்பனை செய்ய முடியும். பணியாட்கள் வைத்து மேற்கொள்ளும்போது, இது சாத்தியமில்லை. இதனால், அறுவடை இயந்திரங்களுக்கு கூடுதல் கட்டணம் என்றாலும், அதையே பயன்படுத்த வேண்டிய சூழ்நிலை உள்ளது,' என்றனர்.

**ஒரு குலையில் இரு வாழைப் பூ**

கும்மிடிப்பூண்டி:வீட்டு தோட்டத்தில் வளர்க்கப்பட்டு வரும் வாழை மரத்தில், ஒரு குலையில், இரு வாழைப் பூக்கள் தோன்றி உள்ளதை, அப்பகுதி மக்கள் ஆச்சர்யத்துடன் கண்டு செல்கின்றனர்.கும்மிடிப்பூண்டி, பாலகிருஷ்ணாபுரம் இரண்டாவது தெருவில் வசித்து வருபவர்

எத்திராஜ். இவர் தன் வீட்டின், பின்புற தோட்டத்தில் காய், கனி செடிகளுடன், வாழை மரங்கள் வளர்த்து வருகிறார்.அதில் ஒரு வாழை மரத்தில் இருந்து, 20 நாட்களுக்கு முன் வெளிவந்த ஒரு வாழைப்பூ, குலை தள்ளியது. எப்போதும் போல் இல்லாமல் அனைவரையும் ஆச்சரியப்பட வைக்கும் விதத்தில், அந்த குலைக்கு கீழ் இருந்த, வாழைப் பூவில் இருந்து, கிளையாக மற்றொரு வாழைப்பூ, வெளி வந்தது. தற்போது அந்த இரு வாழைப் பூக்களும், அளவில் ஒன்றாக காணப்படுகிறது.இந்த தகவலை அறிந்த, அப்பகுதி மக்கள் ஆச்சரியத்துடன், அந்த குலை தள்ளிய வாழைப் பூக்களை கண்டு செல்கின்றனர்.

இதுகுறித்து, கும்மிடிப்பூண்டி வேளாண் விரிவாக்க மைய தோட்டக்கலை உதவி இயக்குனர் ராமலிங்கம் கூறுகையில், ""மரபியலில் ஏற்படும் மாற்றங்களால், எப்போதாவது இதுபோன்று ஒரு வாழை மரத்தின் குலையில், இரு வாழைப்பூக்கள் வெளிவரும்," என்றார்.மேலும், ""சுற்றி உள்ள மற்ற வாழை மரங்களில் இருந்து, இதேபோன்று இரு வாழைப்பூக்கள் வெளிவந்தால், உடனடியாக கவனிக்கப்பட வேண்டும்" என, தெரிவித்தார்.

**கரும்பு வெட்டும் தொழிலாளர்கள் கோரிக்கை ஆர்ப்பாட்டம்**

விழுப்புரம்:தமிழ்நாடு கரும்பு வெட்டும் தொழிலாளர் சங்கம் சார்பில் விழுப்புரத்தில் கோரிக்கை ஆர்ப்பாட்டம் நடந்தது.விழுப்புரம் கலெக்டர் அலுவலகம் முன் நடந்த ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட தலைவர் செல்வராஜ் தலைமை தாங்கினார். சரவணன், விஸ்வநாதன் முன்னிலை வகித்தனர்.கரும்பு வெட்டும் பத்து லட்சம் தொழிலாளர்களுக்கு தனி நலவாரியம் அமைக்க வேண்டும். தொழிலாளர்களுக்கு இலவச சீருடை, ரப்பர் ஷூ வழங்குதல், தொழிலாளர்களுக்கு பென்சன் வழங்க வேண்டும் மற்றும் கரும்பு டன் 3 ஆயிரத்து 500 ரூபாய் விலையை நிர்ணயிக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடந்தது. இதில் ராமமூர்த்தி எம்.எல். ஏ., கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினார்.

மாநில பொதுச்செயலாளர் கலியன், இந்திய கம்யூ., மாவட்ட செயலாளர் குமார், துணை செயலாளர் குப்புசாமி உட்பட பலர் பேசினர். ராஜஸ்ரீ ஆலை சங்க செயலாளர் புத்திரன் நன்றி கூறினார்.

**தேக்கம்! விற்பனைக்காக குவிக்கப்பட்ட கரும்புகள்... வியாபாரிகள், விவசாயிகள் பெரும் சோகம்**

நாமக்கல்: நாமக்கல் பகுதியில், பொங்கல் பண்டிகையை முன்னிட்டு குவிக்கப்பட்ட கரும்பு, விற்பனையாகாமல், மலைபோல் தேக்கமடைந்தது. அதனால், விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் சோகத்தில் உள்ளனர்.

பொங்கல் பண்டிகையில், தித்திக்கும் செங்கரும்புகள் முக்கிய இடம் பிடிக்கிறது. பண்டிகையை மையப்படுத்தியே, இக்கரும்புகள் பரவலாக விளைவிக்கப்படுகின்றன. இந்தாண்டு பொங்கல் பண்டிகை வருவதற்கு, ஒரு மாதத்திற்கு முன்பே, செங்கரும்புகள் ஆங்காங்கே நடக்கும் கிராம சந்தைகளில் விற்பனைக்கு வந்தது.

எனினும், பண்டிகையொட்டி, அதிகளவில் செங்கரும்புகள் விற்பனைக்கு வந்தது. நாமக்கல்லைப் பொறுத்தவரை, நாமக்கல், பரமத்தி சாலை, மோகனூர் சாலை, வாரச்சந்தை வளாகம், சேலம் சாலை என பல இடங்களில், பல்வேறு இடங்களில் இருந்து கொண்டுவரப்பட்ட கரும்புகள், விற்பனைக்காக மலைபோல் குவிக்கப்பட்டன.

ஒரு ஜோடி கரும்பு, 50 முதல் அதிகபட்சமாக, 75 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டன. கடந்த ஆண்டைப் போலவே, இந்தாண்டும் கரும்பின் விலை உச்சத்தில் இருந்தது. பண்டிகை நேரம் என்பதால், விலை அதிகம் என்ற போதிலும், கரும்புகளை மக்கள் கட்டாயம் வாங்குவர் என, வியாபாரிகள் எதிர்பார்ப்பில் இருந்தனர்.

எனினும், வியாபாரிகளின் எதிர்பார்ப்புகளுக்கு தகுந்தாற்போல், கரும்பு விற்பனையாகவில்லை. மேற்குறிப்பிட்ட பல இடங்களில், விற்பனைக்கு குவிக்கப்பட்ட கரும்புகள், பண்டிகை முடிந்தும் மலைபோல் தேங்கியே கிடந்தது. இது, கரும்பு விவசாயிகள் மற்றும் வியாபாரிகளை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

கரும்பு வியாபாரிகள் சிலர் கூறியதாவது:

நாமக்கல் பகுதியில், லாரி, முட்டைத் தொழில் சிறந்து விளங்குகிறது. அதுபோல், விவசாயமும் முக்கிய இடம் பிடிக்கிறது. உழைக்கும் தொழிலாளர்கள் என்பதால், பண்டிகை சமயத்தில், விலையை பொருட்படுத்தாமல், அனைத்து விதமான பொருட்களையும் வாங்கி மகிழ்ச்சியாக இருப்பர்.

ஆனால், தற்போது நிலைமை தலைகீழாக மாறியுள்ளது. அதற்கு முக்கிய காரணம் மின்வெட்டு பிரச்னை. மின்வெட்டு பிரச்னை காரணமாக லாரி, விவசாயம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. அந்த பாதிப்பு காரணமாக, தொழிலாளர்களிடம் பணப் புழக்கமும் குறைந்துள்ளது.

அதன் எதிரொலியாக, பொங்கல் பண்டிகை சமயத்தில் கரும்புகளை வாங்குவதில், மக்கள் அதிக ஆர்வம் காட்டவில்லை. கடந்த ஆண்டும், இதேபோல் ஒரு ஜோடி கரும்பு, 75 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது. அப்போது, விற்பனைக்கு கொண்டுவரப்பட்ட கரும்பு, ஓரிரு தினங்களில் முற்றிலும் விற்றுத் தீர்ந்தது.

ஆனால், தற்போது விற்னைக்கு கொண்டுவரப்பட்ட கரும்பு விற்பனையாகாமல் தேக்கமடைந்துள்ளது. ஓரிரு வாரத்திற்குள், விற்பனை செய்தால் மட்டுமே, கரும்பின் சுவை

இருக்கும். அதன்பின், சாறு குறையும் என்பதால், கரும்புகளை விற்பனை செய்ய இயலாது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

### 20 லட்சம் தென்னை நாசம் விவசாயிகள் கவலை

ஈரோடு: கீழ்பவானி பாசன பகுதியில், 20 லட்சம் தென்னை மரங்கள் கருகியதாக, கீழ்பவானி பாசன விவசாயிகள் நல சங்க தலைவர் நல்லசாமி தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் கூறியதாவது:
தமிழகத்தில் மேட்டூர் அணைக்கு அடுத்து, கீழ்பவானி நீர்த்தேக்கம் பெரியது. நடப்பாண்டில், கீழ்பவானி நீர்த்தேக்கம் பாசனம் பழைய பவானி பாசனத்துக்கு ஒரு போகத்துக்கு மட்டுமே தண்ணீர் விடப்பட்டது. 2.07 லட்சம் ஏக்கர் கீழ்பவானி பாசனத்துக்கு இதுவரை தண்ணீர் திறக்கவில்லை.
அரசாணைப்படி, கீழ்பவானி பாசன தேவையை பூர்த்தி செய்த பின்பே, பழைய பாசனத்துக்கு, இரண்டாம் போகத்துக்கு தண்ணீர் திறக்க வேண்டும். ஆனால், பாய்ந்து முடித்த பழைய பாசனங்களுக்கு தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. கீழ்பாவனி பாசனத்துக்கு இந்தாண்டு, தண்ணீர் திறக்கப்படாவிட்டால், பாசன பகுதியில் இருந்து வளரும், 20 லட்சம் தென்னை மரங்கள் பட்டுப்போகும். பழைய பாசனத்துக்கு தண்ணீரை உடன் நிறுத்த வேண்டும். அணையிலும், மின் அணையிலும் இருக்கும், பத்து டி.எம்.சி., நீரை கீழ்பவானி பாசனத்துக்காக திறக்கப்பட வேண்டும்.
மின் அணையில் இருந்து, அரை டி.எம்.சி., தண்ணீர் திறக்கப்பட்டு, காலிங்கராயன் பாசனத்துக்கு நேற்று முன்தினம் முதல் வினாடிக்கு, 750 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. அரை டி.எம்.சி., தடப்பள்ளி அரக்கன்கோட்டை பாசனத்துக்கும், மீண்டும் அரை டி.எம்.சி., கீழ்பவானி பாசனத்துக்கும் விடுவதாக உள்ளது. 15,000 ஏக்கருக்கு, அரை டி.எம்.சி., தண்ணீரும், இரண்டு லட்சத்து, 7,000 ஏக்கருக்கும், அரை டி.எம்.சி., தண்ணீர் என்று அளவிட்டிருப்பது, நியாயமற்றது, என்றார்.

### போதிய மழையின்றி மரவள்ளி மகசூல் பாதிப்பு

கோபிசெட்டிபாளையம்: கோபி சுற்று வட்டாரத்தில் போதிய மழையின்றி, மானாவாரியில் சாகுபடி செய்யப்பட்ட மரவள்ளி மகசூல் பாதித்துள்ளதால் நடப்பாண்டு விலை உயரும் என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.
ஈரோடு மாவட்டம் முழுவதும், 8,000 எக்டேரில் மரவள்ளி கிழங்கு பயிரிடப்படுகிறது. ஈரோடு மாவட்டத்தில் உள்ள மானாவாரி நிலங்களில், பருவமழையை நம்பி, மரவள்ளி கிழங்கு சாகுபடி செய்யப்படுகிறது. கோபி, நம்பியூர் மற்றும் டி.என்.பாளையம் பகுதிகளில் மட்டும், 1,500

எக்டேரில் பயிரிடப்படுகிறது.
ஈரோடு மாவட்டத்தில் சத்தி, டி.என்.பாளையம், நம்பியூர் மற்றும் கோபி பகுதியில் மாவு பூச்சி தாக்குதல் அதிகளவில் இருந்தது. குறிப்பாக மரவள்ளி, பப்பாளி மற்றும் மல்பெரி இலைகளில் வெள்ளை நிறம் கொண்ட மாவு பூச்சி தாக்குதல் அதிகளவில் இருந்தது. மாவு பூச்சி தாக்குதலால், மரவள்ளி கிழங்கில் மாவு சத்து, 28 சதவீதத்துக்கு பதிலாக வெறும், 18 சதவீதமே இருந்தது. 18 சதவீத மாவு சத்தை வைத்து கொண்டு தரமான ஸ்டார்ச்சை தயாரிக்க முடியாது. இதனால் மரவள்ளி கிழங்குக்கு குறைந்த விலையே கிடைத்தது. வழக்கமாக ஒரு ஏக்கருக்கு, 12 டன் முதல், 15 டன் வரை மரவள்ளி விளைச்சல் கிடைக்கும். மாவு பூச்சி தாக்குதலால் வெறும் ஐந்து டன்னாக மரவள்ளி குறைந்ததால் விவசாயிகள் பாதிக்கப்பட்டனர்.
மாவு பூச்சி தாக்குதல் ஒட்டுண்ணிகள் மூலம் கட்டுப்படுத்தப்பட்டது. இதற்கிடையில் மஞ்சள் விலை கடுமையாக வீழ்ச்சியடைந்தது. மானாவாரி நிலங்களில் சாகுபடி செய்யப்பட்ட மரவள்ளி கிழங்கு பாசனப்பகுதியில் விவசாயிகள் சாகுபடி செய்தனர். மரவள்ளி கிழங்கு மூலம் தயாரிக்கப்படும் பொருட்களான ஜவ்வரிசி மற்றும் ஸ்டார்ச்சுக்கு தேவை நடப்பாண்டு அதிகரித்துள்ளது.
நடப்பாண்டு போதிய அளவு பருவ மழை பெய்யவில்லை. கோபி சுற்று வட்டாரத்தில் சென்ற சில நாட்களாக சூறாவளி காற்றுடன் லேசானை மழை பெய்கிறது. சிறிது நேரம் பெய்யும் மழை மானாவாரி நிலங்களுக்கு போதிதாக இல்லை. மானாவாரி நிலங்களில் பயிரிட்ட மரவள்ளி கிழங்கு சென்று ஐந்து அடி ஒரு செடி, ஏழு அடிக்கு ஒரு செடி என வளர்ந்துள்ளது.
மழையின்மையால் நன்கு வளர்ச்சியடையாமல், நோய் வாய்பட்டது போல் செடிகள் காணப்படுகிறது. 15 டன் கிடைக்கும் நிலங்களில் ஐந்து டன் கிழங்கு கிடைப்பதே பெரியது என்ற நிலை விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ளது. மரவள்ளி விலை உயரும் என எதிர்பார்க்கின்றனர்.
மரவள்ளி கிழங்கு சாகுபடி செய்த விவசாயிகள் கூறியதாவது:
கோபி சுற்று வட்டாரத்தில் சென்ற இரண்டு ஆண்டுக்கு முன் மாவு பூச்சி தாக்குதல் ஏற்பட்டதால் மரவள்ளி சாகுபடியை மறந்தோம். மாவு பூச்சி தாக்குதல் கட்டுப்படுத்தப்பட்டதை தொடர்ந்த நடப்பாண்டு அதிகளவில் மரவள்ளி சாகுபடி செய்துள்ளோம். பருமழை பொய்த்து விட்டதால் மரவள்ளி செடிகள், காய்ந்து வீணாகி 50 சதவீத மகசூல் பாதித்து விட்டது. மழையின்மையால் முட்டுகூலியை கூட எடுக்க முடியாத நிலை உள்ளது. மகசூல் கடுமையாக பாதித்துள்ளதால் மரவள்ளி விலை நடப்பாண்டு அதிகரிக்கும், என எதிர்பார்க்கிறோம்.
இவ்வாறு அவர் கூறினார்.

**தேயிலை நாற்றுகள் தயார்**

குன்னூர்:காட்டேரி பண்ணையில் விவசாயிகளுக்கு மானிய விலையில் வினியோகிக்க 3 லட்சம் தேயிலை நாற்றுகள் தயாராக உள்ளது. நீலகிரி தோட்டக்கலை துறைக்கு சொந்தமான பண்ணைகளில் தேயிலை, கிராம்பு, குருமிளகு ஆகிய நாற்றுக்கள் வளர்க்கப்பட்டு

விவசாயிகளுக்கு மானிய விலையில் வினியோகிக்கப்படுகிறது. நடப்பாண்டு இந்த செடிகளின் நாற்றுக்கள் வளர்க்க தோட்டக்கலை துறை மூலம் 48 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், குன்னூர் அருகே உள்ள காட்டேரி பண்ணையில் நடப்பாண்டு 3 லட்சம் தேயிலை நாற்றுக்கள் வளர்க்கப்பட்டு வினியோகிக்கப்பட தாயாராக உள்ளது. இந்த நாற்றுக்கள் 50 சதவீத மானியத்தில் விவசாயிகளுக்கு வினியோகிக்கப்படவுள்ளது. ஒரு தேயிலை நாற்று 4 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. விவசாயிகளுக்கு 2 ரூபாய்க்கு விற்கப்படும் என தோட்டக்கலை துறையினர் தெரிவித்தனர்.

**அதிர்ச்சி! கரூர் மாவட்ட விவசாயிகள் கடும்... ஆண்டு சராசரியை விட குறைந்த மழை**

கரூர்: கடந்தாண்டு, சராசரி மழையை விட, குறைந்த அளவு மழையே பெய்துள்ளதால், கரூர் மாவட்ட விவசாயிகள் கடும் அதிர்ச்சியில் உள்ளனர்.

தமிழகத்தில், குறைந்தளவில் மழை பெய்யும் மாவட்டங்களில், கரூரும் ஒன்று. வழக்கமாக, கரூர் மாவட்டத்தில், ஆண்டு தோறும், ஜனவரி முதல், டிசம்பர் வரை, 652.20 மி.மீ., மழை சராசரியாக பெய்ய வேண்டும். ஆனால், கடந்தாண்டு ஜனவரி மாதத்தில், 24.60 மி.மீ., ஃபிப்ரவரி, 7.10, மார்ச், 2, ஏப்ரல், 997.96, மே, 1,064.40, ஜூன், 83.90, ஜூலை, 46.50, ஆகஸ்ட், 493.10, செப்டம்பர், 484.40, அக்டோபர், 230.6, நவம்பர், 808.80, டிசம்பர், 13.9, என, ஆண்டு முழுவதும் மொத்தம், 6,332 மி.மீ., மழை பெய்தது. இதன் சராசரி, 527.70 மி.மீ., மழையாகும்.

இந்நிலையில், கரூர் மாவட்டத்தில், கடந்தாண்டு, 10 ஆயிரத்து, 60 ஹெக்டேரில் நெல்லும், 8,213 ஹெக்டேரில் சிறு தானியமும், 6,328 ஹெக்டேரில் பயறு வகைகளும், 5,828 ஹெக்டேரில் எண்ணை வித்துகளும், 5,662 ஹெக்டேரில் கரும்பும் பயிரிடப்பட்டுள்ளது. ஆண்டு சராசரி மழையை விட, நடப்பாண்டு குறைவாக மழை பெய்துள்ளதால், சாகுபடி செய்யப்பட்டுள்ள பல்வேறு பயிர்களின் நிலை, கேள்விக்குறியாக உள்ளது.

கரூர் மாவட்டத்தில், காவிரி மற்றும் அமராவதி ஆற்று தண்ணீரை நம்பி, ஆயிரக்கணக்கான விவசாயிகள் உள்ளனர். கடந்தாண்டு, மேட்டூர் அணையில் இருந்து எதிர்பார்த்த அளவில், சம்பா சாகுபடிக்கு தண்ணீர் திறக்கவில்லை. அமராவதி ஆற்று நீரும், கரூர் மாவட்ட விவசாயிகளை ஏமாற்றி விட்டது. இந்நிலையில், கடந்தாண்டு, தென்மேற்கு பருவமழை, வட கிழக்கு பருவ மழை மற்றும் கோடைகால மழையும், எதிர்பார்த்த அளவில் பெய்யவில்லை.

ஆண்டு சராசரி மழையும், கரூர் மாவட்டத்தில் குறைந்து விட்டதால், நிலத்தடி நீர் மட்டமும் வெகுவாக குறைந்துள்ளது. இதனால், கரூர் மாவட்டத்தில் மானாவாரி நிலங்களை நம்பியுள்ள விவசாயிகள், காவிரி, அமராவதி ஆற்றுப் பாசன பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் பெரும்

சோகத்தில் உள்ளனர்.

2011ல் ஆண்டில் கொட்டிய மழை!

கரூர் மாவட்டத்தில் கடந்தாண்டு ஆண்டு சராசரி மழை குறைந்த நிலையில், கடந்த, 2011ம் ஆண்டில் தென்மேற்கு பருவமழை, வடகிழக்கு பருமழை காலங்களில், சராசரி மழையளவை விட அதிகமாக பெய்தது. கடந்த, 2011ம் ஆண்டு ஜனவரி மாதம் முதல், டிசம்பர் மாதம் வரை, 8,685 மி.மீ., மழை பெய்தது. இதன் சராசரி, 723.8 மி.மீ., ஆகும். ஆனால் கடந்த, 2012ம் ஆண்டு ஜனவரி மாதம் முதல், டிசம்பர் மாதம் வரை, 6,332 மி.மீ., மழைதான் பெய்துள்ளது. இதன் சராசரி, 527.70 மி.மீ., ஆகும். ஆண்டு சராசரி (652.20) மழையை விட, கரூர் மாவட்டத்தில் 44.50., மி.மீ., மழை குறைவாக கடந்தாண்டில் பெய்துள்ளது.

**ஒழுங்குமுறை கூடத்தில் நாளை பருத்தி ஏலம்**

பெரம்பலூர்: "ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நாளை (18ம் தேதி) முதல் பருத்தி ஏல விற்பனை துவங்குகிறது' என, பெரம்பலூர் கலெக்டர் தரேஷ்அஹமது தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட அறிக்கை:

பெரம்பலூர் வடக்கு மாதவி ரோட்டில், மாவட்ட ஒழுங்குமுறை விற்பனை கூடம் செய்யப்படுகிறது. இந்த விற்பனை கூடத்தில் விவசாயிகள் விளைவித்த பொருட்களுக்கு நல்ல விலை கிடைக்கவும், இடைத்தரகர்களால் விவசாயிகளுக்கு கிடைக்க வேண்டிய லாபம், தனியாருக்கு செல்லாமல் தடுக்கவும், பெரம்பலூரில் அதிகம் பயிரிடப்படும் விவசாய விளைபொருட்களான பருத்தி, மக்காச்சோளம், மஞ்சள், நிலக்கடலை, எள் போன்ற விளைபொருட்கள் விற்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பல்வேறு மாவட்டங்களிலிருந்து, வியாபாரிகள் பெரம்பலூர் ஒழுங்குமுறை விற்பனை கூடம் வந்து, ஏல முறையில் விளைபொருட்களை வாங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில், விவசாயிகளின் விளைபொருட்களுக்கு உயர்ந்த விலை, சரியான எடை, உலர்களம் வசதி, பொருளீட்டு கடன் வசதி, விளைபொருட்களை இருப்பு வைக்க கிடங்குவசதி ஆகியவற்றோடு, மறைமுக ஏலம் மூலம் நல்ல விலையும் கிடைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் விளைபொருள் இருப்பு வைத்திட, நாள் ஒன்றுக்கு, மூட்டைக்கு, 10 பைசா வாடகையாக வசூலிக்கப்படுகிறது. ஒழுங்கு முறை விற்பனைகூடத்தில் தனிநபருக்கு பொருளீட்டு கடன், இரண்டு லட்சம் ரூபாய் வரை வழங்கப்படுகிறது. இந்த கடனுக்கு முதல், 15 நாட்களுக்கு வட்டி வசூலிக்கப்படுவது இல்லை. 16வது நாள் முதல், 6 மாதம்

வரை, 5 சதவீத வட்டி வசூலிக்கப்படுகிறது.

ஒழுங்கு முறை விற்பனைக்கூடத்தின் மூலம், ஆண்டொன்றுக்கு ஒரு டன் அல்லது, பத்தாயிரம் ரூபாய் மதிப்புள்ள விளைபொருள் விற்பனை செய்யும் விவசாயிகளுக்கு, உழவர் நலத்திட்ட அடையாள அட்டை வழங்கப்படுகிறது.

பெரம்பலூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தின் மூலம், 2012ம் ஆண்டில் பருத்தி குவிண்டாலுக்கு, 3,500 ரூபாய் முதல், அதிகபட்சமாக 4,500 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டு, பருத்தி மொத்தம், மூன்று கோடி ரூபாய்க்கும், மக்காச்சோளம், மூன்று லட்சம் ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

நடப்பு பருவத்தில் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தின் மூலம், 30 கோடி ரூபாய்க்கு விவசாய விளைபொருட்கள் விற்பனை செய்ய இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

2013ம் ஆண்டிற்கான விளைபொருட்கள் ஏல விற்பனை நாளை (18ம் தேதி) முதல், வெள்ளிக்கிழமைகளில் தொடர்ந்து நடக்கும். எனவே விவசாயிகள் தாங்கள் அறுவடை செய்து வரும் பருத்தி, மக்காச்சோளம் உள்ளிட்ட விளைபொருட்களை, ஒழுங்குமுறை விற்பனை கூடம் மூலம் விற்று பயனடைய வேண்டும்.

**விவசாயிகள் குறைதீர் கூட்டம் 18ல் நடப்பு**

அரியலூர்: மாவட்ட விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம் வரும், 18ம் தேதி நடக்கிறது.

இதுகுறித்து அரியலூர் கலெக்டர் செந்தில்குமார் வெளியிட்ட அறிக்கை:

அரியலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்நாள் கூட்டம், வரும், 18ம் தேதி வெள்ளிக்கிழமை காலை, 11 மணிக்கு, அரியலூர் கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் நடக்கிறது.

இக்கூட்டத்தில் வேளாண்மை சம்பந்தப்பட்ட நீர்பாசனம், வேளாண்மை கடனுதவிகள், வேளாண்மை இடுபொருட்கள், வேளாண்மை இயந்திரங்கள் மற்றும் விவசாய மேம்பாட்டுக்கான நலத்திட்டங்கள் பற்றிய முறையீடுகள் பற்றி விவாதிக்கப்படும். இதில் விவசாயிகள் பங்கேற்று, தமது குறைகளை தெரிவித்து தீர்வு காணலாம்.

**50 ஆண்டு சராசரி மழை குறைவு திண்டுக்கல்லில் விவசாயிகள் பாதிப்பு**

திண்டுக்கல்: திண்டுக்கல் மாவட்டத்தில் 50 ஆண்டுகால சராசரி மழையளவு கடந்தாண்டு குறைந்துள்ளதால் விவசாயம் கேள்விக்குறியாகியுள்ளது. திண்டுக்கல் மாவட்டம், முழுக்க விவசாயத்தை நம்பியே உள்ளது. பெரிய ஆறுகள் இல்லாத காரணத்தினால், அணைகளும், குளங்களும், கண்மாய்கள், கிணறுகளும்தான் பாசனத்தின் தூண்களாக விளங்குகின்றன. எந்தாண்டும் இல்லாத அளவிற்கு, தற்போது அவற்றில் 10 சதவீதம் கூட நீர் இருப்பு இல்லாத

நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் கால்நடைகளுக்கு தீவனம் கூட கிடைக்குமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.வழக்கமாக திண்டுக்கல் மாவட்டத்தில் வறட்சி என்றால், தஞ்சாவூர் மாவட்டத்திற்கு விவசாயிகள் செல்வார்கள். ஆனால் இந்தாண்டு தஞ்சாவூரும், கடும் வறட்சியில் சிக்கி தவிப்பதால், விவசாயிகள் பரிதவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

திண்டுக்கல் மாவட்டத்தில் 50 ஆண்டு சராசரி மழையளவு(மி.மீ.,) ஜனவரி- 33.9, பிப்ரவரி-10.8, மார்ச் 15.7, ஏப்ரல் 61.0, மே 78.4, ஜூன் 32.3, ஜூலை 30.6, ஆகஸ்ட்65.9, செப்டம்பர் 89.5, அக்டோபர்189.1, நவம்பர் 163.8, டிசம்பர் 65, மொத்தம் 836.கடந்தாண்டு மழை (மி.மீ.,): ஜனவரி- 1.63மி.மீ.,, பிப்ரவரி 0.20, மார்ச்-3, ஏப்ரல் 46.38, மே 58.36, ஜூன் 6.98, ஜூலை 40.43, ஆகஸ்ட் 48.02, செப்டம்பர்34.47, அக்டோபர் 238, நவம்பர் 26.29, டிசம்பர் 1.08 மொத்தம் 507.14 மி.மீ.,யும் மழை பெய்துள்ளது. கடந்த 50 ஆண்டுகளில் இந்தாண்டு 328.86மி.மீ., குறைவாக உள்ளது.கண்மாய் நிலை: மாவட்டத்தில் உள்ள 2065 மானாவாரி கண்மாய்களில் நீர் இருப்பு குறைவாக உள்ளது. மானாவாரி கண்மாய்களில் 15 சதவீதம் மட்டுமே தண்ணீர் உள்ளது. இதுவும் ஒன்று முதல் இரண்டாவது பாசனம் செய்வதற்கு நீர் உள்ளது. மீதமுள்ள 85 சதவீதம் கண்மாய்களில் 15 சதவீதத்திற்கும் குறைவாகத்தான் நீர் உள்ளது.கிணறுகள்: மொத்தமுள்ள 91,488 பாசனக்கிணறுகளில் 20 சதவீதம் கிணறுகளில்2 மணிநேரமும், 80 சதவீதம் கிணறுகளில் ஒரு மணிநேரம் மட்டுமே பாசனத்திற்கு நீர் இருப்பு உள்ளது. மழையில்லாததால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

**நெல் விளைச்சல் வீழ்ச்சிகேரளாவில் தொழில் முடக்கம்**

தேனி:தேனி மாவட்டத்தில் நெல் விளைச்சல் வீழ்ச்சி அடைந்துள்ளதால், கேரளாவில் காட் போர்டு அட்டை, பிளைவுட் தயாரிப்பு தொழில் பாதிப்படைந்துள்ளது.
தேனி மாவட்டத்தில் உள்ள 20 ஆயிரம் ஏக்கருக்கு அதிக பரப்பில் விளையும், நெல் வைக்கோல்கள் முழுக்க கேரளாவிற்கே ஏற்றுமதியாகின்றன. நெல் அறுவடை சீசனில் கேரள வியாபாரிகள் தேனி மாவட்டத்தில் முகாமிட்டு வைக்கோல்களை வாங்கிச் செல்வது வழக்கம். கேரளாவில் நடக்கும் காட் போர்டு அட்டை, பிளைவுட் தயாரிப்பு தொழிலுக்கு இந்த வைக்கோல்களே முக்கிய மூலப்பொருட்களாக உள்ளது. நடப்பு ஆண்டு, தேனி மாவட்டத்தில் முதல் போகத்திலும், இரண்டாம் போகத்திலும் நெல் விளைச்சல் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் வைக்கோல் வரத்தும் முழுமையாக தடைபட்டுள்ளது. கேரளாவிற்கு இந்த ஆண்டு வைக்கோல்கள் செல்லவில்லை. இதனால் வைக்கோல் இன்றி, எர்ணாகுளம், கொச்சின், கோழிக்கோடு, ஆழப்புலா பகுதிகளில் வைக்கோலை மட்டுமே

பிரதானமாக கொண்ட காட்போர்டு அட்டை, பிளைவுட் தயாரிப்பு தொழில்கள் பாதிப்படைந்துள்ளன.

**ஆர்.எஸ்.மங்கலத்தில் கடும் பனிமிளகாய் விவசாயிகள் கவலை**

ஆர்.எஸ்.மங்கலம்:மழையின்றி நெல்லும் கைவிட்ட நிலையில், கடும் பனிப்பொழிவால், காய்கள் உதிர்ந்து வருவதால், மிளகாயும், கண்ணீரை வரவழைத்து விடுமோ என்ற கவலையில், ஆர்.எஸ்.மங்கலம் விவசாயிகள் உள்ளனர்ஆர்.எஸ்.மங்கலம் ஒன்றியத்தில் பருவமழை ஏமாற்றியதால், நெல் மகசூல் பாதிப்படைந்த நிலையில், இப்பகுதியில் 2,400 ஏக்கரில் மிளகாய் விதைப்பு செய்யப்பட்டுள்ளது. கடந்த மாதம் பெய்த சாரல் மழை, மிளகாய் செடிகளுக்கு ஏற்றதாக இருந்தது.

செடிகள் அனைத்தும் பூ, பூத்து காய்க்க துவங்கியுள்ளன. இந்நிலையில் சில நாட்களாக பனிப்பொழிவு அதிகரித்துள்ளதால், பூ பிஞ்சுகள் செடிகளில் இருந்து உதிர்ந்து வருகின்றன. இதனால் மகசூல் குறையும் என விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.ஆர்.எஸ்.மங்கலம் விவசாயிகள் முனியாண்டி, கண்ணுச்சாமி ஆகியோர் கூறியதாவது: காய் காய்க்க துவங்கிய நிலையில், கடும் பனிப்பொழிவு உள்ளதால் பூ, பிஞ்சுகளுக்கு காற்றோட்டம் கிடைக்காமல் வெம்பி உதிர்ந்து வருகின்றன. ஏக்கருக்கு 12 ஆயிரம் செலவு செய்துள்ள நிலையில், பனிப்பொழிவு நீடித்தால், காய்த்த காய்கள் அனைத்தும் உதிர்ந்து விடும். சில ஆண்டுகளாக ராமநாதபுரம் மாவட்ட விவசாயிகளுக்கு இயற்கை ஒத்துழைக்காதால் விவசாயத்தை விட்டு வேறு தொழில் தேடி நகரங்களுக்கு சென்று பல விவசாயிகள் கூலி தொழில் செய்து வருகின்றனர், என்றனர்.

**விவசாயிகளுக்கு கடந்த 2012ல் நஷ்டம் ஏற்பட்டதால் நிவாரணம் கேட்டு ஆர்ப்பாட்டம்**

ஆழ்வார்குறிச்சி:விவசாயிகளுக்கு கடந்த 2012ல் நஷ்டம் ஏற்பட்டதால் நிவாரணம் கேட்டு ஆர்ப்பாட்டம் நடத்த மாவட்ட விவசாயிகள் சங்கத்தினர் முடிவு செய்துள்ளனர்.

மாவட்ட விவசாயிகள் சங்க செயலாளர் கசமுத்து, மாவட்ட கலெக்டர் மற்றும் உயரதிகாரிகளுக்கு விடுத்துள்ள மனுவில் குறிப்பிட்டுள்ளதாவது:-

திருநெல்வேலி மாவட்டத்தில் போதிய மழை இல்லாத காரணத்தினால் 2012ம் வருடம் கார் சாகுபடி நடக்கவில்லை. பிசானமும் பெரும்பகுதியாக ஆற்றுப்பாசன பகுதிகளில் போதிய தண்ணீர் இல்லாததால் நடக்கவில்லை. தாமிரபரணி உட்பட 11 அணைக்கட்டு பகுதிகளிலும் பெரும்பகுதி விவசாயமும் நடைபெறவில்லை.

மேலும் மானாவாரி குளங்களில் எந்த பகுதியிலும் விவசாயம் நடைபெறவில்லை. புன்செய் தானியங்கள் இல்லாமலேயே போய்விட்டது. வாழை பயிர்களையாவது காப்பாற்ற முடியுமா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது. பயிரிட்ட பயிர்களை பாதுகாக்க சுழற்சி முறையிலாவது தண்ணீர் கொடுத்து விவசாயத்தை பாதுகாத்திட வேண்டுமென ஏற்கனவே மாவட்ட கலெக்டரிடம் மனு கொடுக்கப்பட்டுள்ளது.

ஒரு வருடத்திற்கு விவசாயிகள் வாழ்க்கை நடத்த முடியாத நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளது. கீழ் நீரூற்றுகள் போதிய மழையில்லாமல் குறைந்து வருகிறது. விவசாய உற்பத்தி செலவுகள் இரண்டு

மடங்காக உயர்ந்துள்ளது. மத்திய, மாநில அரசுகள் விவசாயிகளின் கஷ்டத்தை கண்டு கொள்வதாக தெரியவில்லை. டெல்டா விவசாயிகளை பாதுகாப்பது போல் நெல்லை மாவட்டத்தில் உள்ள அனைத்து விவசாயிகளின் உண்மை நிலையறிந்து பாதுகாக்க வேண்டும். ஏக்கருக்கு கார் பருவத்தில் பயிர் செய்ய முடியாமல் உள்ள விவசாயிகளுக்கு காரும், பிசானமும் சேர்த்து 20ஆயிரம் ரூபாயும், பிசான பருவம் மட்டும் பயிர் செய்ய முடியாத விவசாயிகளுக்கு ஏக்கருக்கு 15ஆயிரமும், புன்செய் பயிர் செய்ய முடியாத விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.10 ஆயிரமும், விவசாயிகளின் வாழ்க்கையை பாதுகாப்பதற்காக வறட்சி நிவாரண நிதியாக வழங்க வேண்டும்.

உழவர் பாதுகாப்பு அடையாள அட்டை கிடைக்காத அனைத்து விவசாயிகளுக்கும் அடையாள அட்டை கிடைத்திடவும், 60வயதை கடந்த அனைத்து விவசாயிகள் மற்றும் விவசாய தொழிலாளர்களுக்கு மாதம் ரூ.1000 முதியோர் உதவித்தொகை எந்தவித நிபந்தனையின்றி கிடைத்திட மத்திய, மாநில அரசுகளை வற்புறுத்தி வரும் பிப்.15 வரை ஆர்ப்பாட்டம், பொதுக்கூட்டம் நடத்திடவும் விவசாயிகள் சங்கத்தின் சார்பில் முடிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

**பருவமழை குறைவால் நெல்விவசாயம் பாதிப்பு 6 அடியானது பேச்சிப்பாறை நீர்மட்டம்**

நாகர்கோவில்:குமரி மாவட்டத்தில் பருவமழை குறைவால் நெல்விவசாயம் பாதிக்கும் நிலை உள்ளது. பேச்சிப்பாறை நீர்மட்டம் 6 அடியாக குறைந்துள்ளது.

வடகிழக்கு, மற்றும் தென்மேற்கு பருவமழை எதிர்பார்த்த அளவில் இல்லாததால் குமரி மாவட்டத்தில் விவசாயிகள் கவலையில் உள்ளனர். கும்பப்பூ சாகுபடி பரவலாக மேற்கொண்டுள்ள நிலையில் அணைகளில் நீர்மட்டம் மிகவும் குறைவாக காணப்படுகிறது. பேச்சிப்பாறை அணையில் விநாடிக்கு 128 கனஅடி தண்ணீர் உள்வரத்தாக வந்துகொண்டிருந்த போதிலும், இருக்கும் நீரை விவசாயத்திற்கு வழங்கும் வகையில் விநாடிக்கு 389 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. அணை நீர்மட்டம் 6.40 அடி மட்டுமே உள்ளது.பெருஞ்சாணி அணையில் 41.60 அடி, சிற்றார் ஒன்றில் 5.61, சிற்றார் இரண்டில் 5.70, பொய்கையில் 9, பொய்கையில் 26.33 அடி தண்ணீர் மட்டுமே உள்ளது. வழக்கமாக ஆண்டின் துவக்கத்தில் போதிய மழை இல்லாமல் இருந்தால் நடுத்தர பருவம், அல்லது இறுதி பருவங்களில் நல்ல மழை பெய்வது இயல்பு. ஆனால் கடந்த ஆண்டு போதிய மழை இல்லாததால் அணைகளில் நீர்மட்டம் உயரவில்லை. இந்நிலையில் அணை தண்ணீரை மட்டுமே நம்பியிருக்கும் கும்பப்பூ பயிர்கள் பொதிவரும் தருவாயில் போதிய பாசனநீர் கிடைக்காமல் உள்ளன.இதைப்போல் வாழை, மரச்சீனி, தென்னை என்று பல்வேறு விவசாய பயிர்கள் தண்ணீரின்றி கருகும் தருவாயில் உள்ளன. பேச்சிப்பாறை அணையின் நீர்மட்டமும் எப்போதும் இல்லாத வகையில் குறையும் தருவாயில் உள்ளது. தற்போது மண்முகடுகள் வெளியே தெரியும் அளவுக்கு அணை காணப்படுகிறது. கடந்த ஆண்டு விவசாயிகளுக்கு ஏமாற்றத்தை கொடுத்த வருணபகவான், இந்த 2013வது ஆண்டிலாவது கைகொடுப்பாரா என்ற எதிர்பார்ப்பில் விவசாயிகள், மற்றும் பொதுமக்கள் உள்ளனர்.

**காவிரி தண்ணீரை திறந்து விடக்கோரி உச்ச நீதிமன்றத்தில் தமிழகம் புதிய மனு**

புதுடெல்லி : வாடிய பயிரை காப்பாற்ற காவிரியில் தண்ணீரை திறந்து விடக்கோரி உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு புதிய மனு தாக்கல் செய்துள்ளது. தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தில் நேற்று தாக்கல் செய்த மனுவில் கூறியிருப்பதாவது: தமிழகத்தில் தண்ணீர் இல்லாமல் சம்பா பயிர்கள் பெரும்பாலும் கருகிவிட்டது. பயிர்கள் தொடர்ந்து நாசமாகி வருகிறது. எஞ்சியுள்ள நெற்பயிர்களை காப்பாற்ற குறைந்தபட்சம் 12 டிஎம்சி தண்ணீர் தேவைப்படுகிறது. ஆனால் கர்நாடக அரசு, தமிழகத்திற்கு தண்ணீரை திறந்து விட தொடர்ந்து மறுத்து வருகிறது.

உச்ச நீதிமன்றம் உத்தரவிட்ட பிறகும் தண்ணீர் திறந்து விட கர்நாடக அரசு மறுப்பது தவறானது. கடந்த 10ம் தேதி நடந்த காவிரி கண்காணிப்பு கூட்டத்தில், 'கர்நாடகத்தில் 16 டிஎம்சி தண்ணீர் உள்ளது. இது கர்நாடக மக்களின் குடிநீர் தேவைக்குதான் போதுமானதாக உள்ளது. எனவே இந்த நீரை தமிழகத்திற்கு திறந்துவிட கர்நாடகத்திற்கு உத்தரவிட முடியாது' என்று கண்காணிப்பு குழு உத்தரவிட்டது.

இது ஏற்க முடியாது. தமிழகத்தில் தண்ணீர் இல்லாமல் பயிர்கள் வாடுகின்றன. விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். வாடும் பயிர்களை காப்பாற்ற தமிழகத்திற்கு 12 டிஎம்சி தண்ணீரை திறந்து விட கர்நாடக அரசுக்கு உத்தரவிடவேண்டும். இவ்வாறு தமிழக அரசு மனுவில் கூறியுள்ளது. இந்த மனு விரைவில் விசாரணைக்கு வருகிறது.

**மதுரை மல்லிக்கு "புவிசார் குறியீடு"**



மதுரை : குண்டு குண்டாக பால் வெண்மை கலந்த தூக்கல் வாசனை கொண்ட மதுரை மல்லிகைப் பூவிற்கு மத்திய அரசின் அறிவுசார் சொத்துரிமைக் கழகம் "புவிசார் குறியீடு" அங்கீகாரத்தை வழங்கியுள்ளது. "புவிசார் குறியீடு" தமிழகத்தில் மலருக்கு என முதல் முறையாக மதுரை மல்லிக்கு தற்போது கிடைத்திருக்கிறது. மதுரை, தேனி, திண்டுக்கல், விருதுநகர், சிவகங்கை ஆகிய 5 மாவட்ட மதுரை மல்லி விவசாயிகள் சங்கத்தினர் மதுரை வேளாண்மைக் கல்லூரி, தானம் அறக்கட்டளை உதவியில் கடந்த 2010 ஜூன் 3ல் இதற்கு விண்ணப்பித்தனர்.

மத்திய அரசின் வணிகவியல் துறையின்கீழ் இயங்கும் அறிவுசார் சொத்துரிமைக் கழகம் 27 மாதங் களுக்குப் பிறகு கடந்த செப்டம்பரில் மதுரை மல்லிக்கு இக்குறியீடு வழங்க முடிவு எடுத்தது. தனது 45ம் இதழில் இதற்கான அறிவிப்பை அப்போது வெளியிட்டது. இதற்கு எதிர்கருத்துக்கள் இருப்பின் அது குறித்து தெரிவிக்க 4 மாதம் கால அவகாசமும் வழங்கியது. ஆனால், இந்த 4 மாதங்களில் மதுரை மல்லிக்கு புவிசார் குறியீடு தருவதற்கு என எந்த ஆட்சேபக் கருத்தும் வரவில்லை. எனவே தற்போது மதுரை மல்லிக்கு "புவிசார் குறியீடு" அறிவிப்பு அதிகாரப்பூர்வமாக வெளியிடப்பட்டுள்ளது.

இந்த குறியீட்டினை 20 ஆண்டுகளுக்கு மதுரை மல்லி விவசாயிகள் பயன்படுத்தலாம். மதுரை மல்லி விவசாயிகள் சங்கத்தினரிடம் பெறும் மல்லிகையை மட்டுமே உலகளவில் "மதுரை மல்லி" என்றழைக்க வேண்டும். ஏற்றுமதிக்கு இக்குறியீடு உதவும். மல்லி விவசாயிகளுக்கு கூடுதல் விலை உள்ளிட்ட பலதரப்பட்ட பலன்கள் கிடைக்கும். மதுரை உள்ளிட்ட 5 மாவட்ட விவசாயிகளின் இந்த "மதுரை மல்லி" பெயரில் மற்ற பகுதி மல்லிகைப் பூவை விற்பதோ அல்லது

பிற பூக்களை இதனு டன் கலப்படம் செய்வதோ தண்டனைக்குரிய குற்ற மாகும். இதற்கு 2 லட்சம் அபராதத்துடன், 5 ஆண்டு சிறைத்தண்டனை உண்டு.

மதுரை உள்ளிட்ட 5 மாவட்ட மண்ணில் கந்தகம், கால்சியம் அதிகம். ராமநாதபுரம் மாவட்டத்தில் பதியன் (செடி)களைப் பெற்று வந்து வளர்த்தாலும் இந்த 5 மாவட்டங்களில் வளரும்போதுதான் அவை "மதுரை மல்லி"யைத் தருகின்றன. இதே செடியை நட்டு வளர்த்தாலும் கோவை போன்ற ஊர்களில் இவ்வகை "மதுரை மல்லி" விளையாது.

மதுரை மல்லி விவசாயிகள் சங்கச் செயலாளர் அரவிந்தன் கூறுகையில், "மதுரை மல்லிக்கு புவிசார் குறியீடு கிடைத்துள்ளது. மதுரை மல்லி வளர்ப்பில் இப்பகுதியில் 20ஆயிரம் விவசாயிகள் இருக்கின்றனர். 50ஆயிரம் ஏக்கர் நிலத்தில் ஆண்டுக்கு 60ஆயிரம் டன் பூக்கள் கிடைக்கின்றன. இந்த புவிசார் குறியீடு அறிவிப்பு தென்மாவட்ட விவசாயிகளுடன், தமிழக மக்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியளித்துள்ளதுÕ என்றார்.

"பதியனுக்கு" புவிசார் குறியீடு
ராமநாதபுரம் விவசாயிகள் முடிவு

மதுரை மல்லிக்கான செடிகள் ராமநாதபுரம் மாவட்டத்தின் தங்கச்சிமடம், பாம்பன், மண்டபம், நொச்சியூரணி, தண்ணீரூற்று, செம்மமடம் எனும் 20க்கும் அதிக கிராமங்களின் நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்களில் வளர்கின்றன. தாய்ச் செடிகளை 20 ஆண்டுகள் வைத்திருக்கும் இவர்கள், கிளைத்தண்டுகளை ஒடித்தெடுத்து பாத்தி கட்டி நெருக்கமாக நட்டு மூன்றே மாதங்களில் ஒன்றரை அடி உயரம் வளர்த்து விற்பனை செய்கின்றனர்.

அடுத்த 3மாதத்திற்குள் பூக்கள் தரும் இச்செடிகளை தலா நான்கு ரூபாய்க்குள் மதுரை பகுதியினர் வாங்கி வந்து விவசாயம் செய்கின்றனர். எனினும் ராமநாதபுரம் தவிர்த்து மதுரை உள்ளிட்ட 5 மாவட்டங்களில் வளரும் மல்லிகைப்பூக்களுக்கே தற்போது "புவிசார் குறியீடு" வழங்கப்பட்டிருக்கிறது. ராமநாதபுரம் மாவட்ட விவசாயிகள் தங்கள் மாவட்டத்தில் விளையும் "பதியன்(செடி)களுக்கென தனி புவிசார் குறியீடு கேட்டு விண்ணப்பிக்க முடிவு எடுத்துள்ளனர்

### மல்லிகை விலை கிடுகிடு ஒரு கிலோ ரூ.1000 ஆனது

கோவை : மதுரையை தவிர தமிழகம் முழுவதும் மல்லிகைப் பூ விலை கடுமையாக உயர்ந்துள்ளது. தமிழகத்தில் சேலம், தர்மபுரி, நாமக்கல், உடுமலைப்பேட்டை, திருச்சி, மதுரை, விருதுநகர், பொள்ளாச்சி, கோவை உள்ளிட்ட இடங்களில் விவசாயிகள் பூக்களை அதிகளவில் சாகுபடி செய்து வருகின்றனர். தற்போது முகூர்த்த நாட்கள் தொடங்கி உள்ளதால், அனைத்து பூக்களின் விலையும் கடுமையாக உயர்ந்துள்ளன.

கோவையில் ஒரு முழம் மல்லிகைப்பூ 20 ரூபாய்க்கு விற்ற நிலையில் தற்போது 60 ரூபாயாக உயர்ந்துள்ளது. ஒரு கிலோ நேற்று ரூ.800க்கு விற்கப்பட்டது. இதேபோல், முல்லை, ஜாதி மல்லி, சம்பங்கி, கனகாம்பரம், செவ்வந்தி உள்ளிட்ட அனைத்து வகை பூக்களின் விலையும் 40 முதல் 60 சதவீதம் வரை விலை உயர்ந்துள்ளது.

சேலத்தில் நேற்று ஒரு கிலோ குண்டுமல்லி ரூ.1,000 வரை விற்றதால் வாடிக்கையாளர்கள் கடும் அதிர்ச்சி அடைந்தனர். குமரி மாவட்டம் தோவாளை பூச்சந்தையில் ஒரு கிலோ பிச்சிப்பூ நேற்று ரூ.700க்கும், மல்லிகைப்பூ ஒரு கிலோ ரூ.1,000க்கும், அரளி ஒரு கிலோ ரூ.200க்கும், சம்பங்கி கிலோ ரூ.700க்கும் விற்பனையானது. மதுரையில் விலை குறைவு: மல்லிகைப் பூவுக்கு பெயர் பெற்ற மதுரையில் பொங்கல் பண்டிகையின்போது ரூ.1,000க்கு விற்க மல்லியை நேற்று ஒரு கிலோ ரூ.600 ஆக சரிந்தது.

### கருகிய பயிரை கண்டு உயிரிழந்த விவசாயி

மன்னார்குடி: மன்னார்குடி அருகே கருகிய பயிரைக் கண்ட விவசாயி சாம்பசிவம் அதிர்ச்சியில் உயிரிழந்தார். ஆலாத்தூரில் 1.5 ஏக்கரில் சம்பா நெற்பயிர் சாகுபடி செய்திருந்த சாம்பசிவம் நீரின்றி பயிர் கருகி உள்ளதை கண்டு மாரடைப்பு ஏற்பட்டு மரணம் அடைந்தார்.

### காவிரி விவகாரம் : தமிழக அரசு மீண்டும் வழக்கு

12 டி.எம்.சி காவிரி நீர் கேட்டு உச்சநீதிமன்றத்தில் தமிழக அரசு மீண்டும் வழக்கு தொடர்ந்துள்ளது. கர்நாடகம் தண்ணீர் திறந்துவிட மறுப்பது பற்றி மனுவில் தமிழக அரசு இன்று தாக்கல் செய்த மனுவில் விளக்கம் அளித்துள்ளது. கர்நாடகத்தில் காவிரி அணையில் 16 டி.எம்.சி. தண்ணீர் உள்ளதாகவும் தமிழக அரசு அந்த மனுவில் தெரிவித்துள்ளது. அதுமட்டுமின்றி கர்நாடக குடிநீர் தேவைக்கு 3 டி.எம்.நீர் மட்டுமே தேவை என்றும் தமிழக அரசு கூறியுள்ளது.